# இலங்கையின் ஓவிய சிற்ப வரலாறு



ஞா. ரட்ணராஜா

JPL
C5664

# இலங்கையின் ஓவிய சிற்ப வரலாறு

32 2 951.93 CC

ஆ. ரட்ணராஜா.

ஆண்டு 9,10,11,12 க்குரியவை.

KOHA JPL

5664

131553

வெளியீடு:
ஆ. ரட்ணராஜா,
165/1 கோவில் வீதி, நல்லூர் வடக்கு
யாழ்ப்பாணம்
(ஏப்ரல், 1989)

131553 CC

பொருளடக்கம்

KOHA
JPL

32

இலங்கையின் ஓவிய சிற்ப வரலாறு
பொலநறுவை 01
அநுராதபுரக் காலம் 02
அநுராதபுரக் கால புத்த கோவில்கள் 04
பொலநறுவைக் கட்டிடங்கள் 05
பொலநறுவைக்காலம் 05
கண்டிய காலம் 06
கொழும்பு நகர்க் காலம் 07
சீகிரியா 08
சந்திர வட்டக் கல் 09
தொலுவில புத்தர் சிலை 10
ஆயிரம் கால் மண்டபம் 10
ருவான் வெலி சாயா 10
தூபராம தாகபம் 11
அபயகிரி தாகபம் 12
ஈசுருமுனி விகாரை 12
சமாதி நிலைப்புத்தர். 12
அவுக்கண புத்தர் சிலை 13
பராக்கிரம பாகு சிலை (பொலநறுவை) 13
காவற் கல் அல்லது காவற்சிலை 14
காவற் சிலைகள் - இரத்தினப் பிரசாத 14
மிருந்தலை கந்தக தாகபம் 14
கிந்தகல 15
கல்விகாரை 15
யாப்பகுவை 16
பொலநறுவைச் சிவன் கோவில் 16
லங்காதிலக ஆலயம் 17
தலதா மாளிகை 17
தெகல்தொருவ 18
தம்புள்ள விகாரை 19
தெவுரட்ட விகாரை (முதலாவது விகாரை) 19
மகாராஜ விகாரை (2வது விகாரை) 19
மூன்றாவது விகாரை 20
நான்காவது விகாரை 20

என். டி. கலாலா

நாலந்த கெடிகே 20
நிசங்கலதா மண்டபம் 21
கந்தக சைத்திய தாதுகோபம் 21
சிராவத்தியின் அற்புதச்செயல் 21
மாயாதேவியின் கனவு 22
பொலநறுவை சேதவனராம விகாரை 22
வட்டதாகே 22
களனியா விகாரை 22
நிலச்சந்திரக் கல் 23
துவாரபாலகர் 23
கைப்பிடி வரிசை 23
மைத்திரேய போதிசத்துவா 24
பத்தினி 24
நீராடுதுறை 24
முருகன் ஆலயம் 24
சிவமூர்த்தம் 25
கஜலட்சுமி 25
திலங்க ஆலய ஓவியம் 25
சிம்மாசனம் 25
வெள்ளிமயிலும் திருவாசியும் 25
மரச்சித்திர வேலை 26
சைவ சிற்ப ஆலயங்களும் வடிவங்களும், பௌத்த
ஆலயங்களும் சைவத்திருவுருவங்களும். 26
இலங்கையில் சைவத்தின் தொன்மை 26
சைவ ஆலயங்கள் 28
சைவ ஆலயங்களின் காலமும் வரலாறும் 28
மௌரிய சிற்ப முறை 31
சைவத்திரு வடிவங்கள் 32
திருகோணமலைத் திருவடிவங்கள் 32
யாழ்ப்பாணத்திற் சைவ ஆலயங்கள் 33
அலங்காரங்களும் அவற்றின் பெயர்களும். 37

* * * * * * * * * * * * * *

KOHA JPL

# இலங்கையின் ஓவிய சிற்ப வரலாறு

இலங்கையை சிங்கள அரசர் காலத்தில் மூன்று பிரிவு களாகப் பிரித்தார்கள். அவை இராஜரட்டை, மாய ரட்டை, உறுகுணை என்பனவாகும். இவற்றில் முதல் இராச தானியாக்கப்பட்ட இடம் அநுராதபுரமாகும். இரண்டாவ தாக பொலநறுவை என்ற இடத்தை இராஜதானியாக்கி னர்கள்.

அநுராதபுரம், பொலநறுவையில் அநேக அழிந்து போன சித்திரங்கள், சிற்பங்கள் காணப்படுகின்றன இலங் கையின் சித்திர வரலாற்றை ஆராயுமிடத்து யாப்பகுவ என்ற இடத்தில் அழிந்து போன சிற்பங்கள் இன்றும் காணப் படுகின்றன.

மற்றும் இலங்கையின் சித்திர வரலாற்றை ஆராயு மிடத்து இலங்கைச் சிற்பத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக் கலாம். அவை ஆரிய சிற்பம், திராவிட சிற்பம் என்பன வாகும். இவற்றில் ஆரிய சிற்பம் வட இந்திய சிற்பமென் றும், திராவிட சிற்பம் தென் இந்திய சிற்பமென்றும் சொல்லப் படுகின்றது. அத்துடன் யாப்பகு குன்றில் ஏறிச் செல்லும் கற்பாறின் நுழை வாயிலின் இரு பக்கமும் தென் இந்திய சிற்ப முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அநுராத புரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள் யாவும் கற்க ளால் பொழியப்பட்டவையாகும்.

## பொலநறுவை.

இங்கேயும் கல்லாலும் செங்கற்களாலும் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கேயுள்ள சில தேவாலயங்க ளிலே பித்தளையிலை வார்க்கப்பட்ட சில சமய உருவங்கள் தென் இந்திய முறையில் செய்யப்பட்டிருந்தன.

இந்திய நாட்டில் சிறப்புற்றிருந்த சிற்ப முறையானது, இலங்கை, சீயம், யாவா, சுமத்திரா, கம்போடியா ஆகிய இடங்களில் பரவியது. திராவிட சிற்ப முறை விசேட மாக இலங்கையிலும், யாவாவிலுமே தோன்றிப் பரவிக் கிடந்தது. இலங்கையில் பௌத்த மதம் வராமுன் சிவ நெறி யே இருந்தது. இதற்குச் சான்று கூறுவது மகாவம்சம்

என்னும் நூலாகும். கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோக மன்னனின் மகன் மகிந்தனால் இலங்கைக்கு பௌத்த மதம் பரவியது. அப்போது முத்த சிவம் என்னும் அரசனின் இரண்டாம் மகன் தேவ நம்பிய தீசன் என்னும் சிங்கள அரசன் பௌத்த மதத்தை மேலோங்கச் செய்தான். சேர, சோழ, பாண்டியர் இந்நாட்டை ஆண்ட காலத்தில் சைவ சமய சம்பந்தமான கோவில்களும், உருவங்களும் அமைக்கப்பட்டன. பௌத்த சமய விகாரைகள், கி.மு. 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளில் மகர நாட்டு ஸ்தாபிகளைப் போல் அமைக்கப்பட்டன. தீசன் மிருந்தலையில் மகாதேய என்னும் புத்த ஆலயத்தையும், அநுராதபுரத்தில் தூபராம, ஈஸ்வர முனிய என்னும் விகாரைகளையும் கட்டுவித்தான். துட்டகைமுனு அரசன் அநுராதபுரத்தில் ருவன்வலிசேயா, மிரிஸ்வெட்டி என்ற ஆலயத்தையும் ஆயிரம் கால் மண்டபம் ஆகிய டகோவாக்களையும் கட்டுவித்தான்.

இவை எல்லாம் அமராவதி சிற்ப முறைகளைத் தழுவியவை. கி.பி. 11ஆம் நூற்றாண்டிலே இலங்கை சோழர் கைக்கு உட்பட்டு பொலநறுவையில் இருக்கும் இரண்டு சிவ தேவாலயங்களும் கட்டப்பட்டன. இவ்வாலயங்கள் இரண்டும் பராக்கிரம பாகுவால் அழிக்கப்பட்டன. இந்த தேவாலயங்கள் திராவிட முறையைத் தழுவியதாகும். இங்கே 1012 - 1044 வரை உள்ள காலமாகிய இராஜேந்திர சோழனின் சிலாசனமும் ( ஞாபக சின்னம்) பொலநறுவையில் தற்போது காணக்கிடக்கிறது. இங்கே 5ஆம் 12ஆம் நூற்றுண்டிற்கு இடையில் உள்ளவையெனக் கருதப்படும், ஏராளமான பௌத்த உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதில் ஒரு பகுதி இன்றும் அநுராதபுரத்து நூதன சாலையிலும் ஒரு பகுதி கொழும்பு நூதன சாலையிலும் காணப்படுகின்றன.

<u>அநுராதபுரக்காலம்.</u>

கி.மு. 247 ஆம் ஆண்டு வரையில் தான் பௌத்த சிற்ப முறை தொடங்கியது. அதன் பின்பு 463 - 500 ஆம் ஆண்டு வரை அநுராதபுரக் காலம் என வகுக்கலாம். அதே காலத்தில் தான் அசோகன் வாழ்ந்தமையினால்

இலங்கையிலும் தொடர்பேற்பட்டது. மகிந்தன் சங்கமித்திரை
என்பவர்கள் இலங்கைக்கு வந்து இந்தியாவுடன் கலாச்சா
ரத் தொடர்பை உண்டாக்கினர். அக்காலத்தில் இலங்கையின்
சிற்ப முறை வட இந்திய சிற்ப முறையைத் தழுவி அமைந்
தது. இதற்குச் சான்றாக அசோகன் கட்டுவித்த கோவிலும்
ஒரு தூணும் காணப்படுகின்றது. இத்தூணில் தாமரை
வடிவப் போதிகை காணப்படுகின்றது. இது கல்லினால் பொழி
யப்பட்டுள்ளது. இக் கோயிலின் நான்கு வாசல்களும் ஒரே
கல் தூணினால் செய்யப்பட்டு புத்தரின் சீவிய சரிதை செதுக்
கப்பட்டுள்ளது. இவ் வாயில் கட்டமைப்பைத் தோரணம் என
சொல்லுவார்கள். தூபி அலங்காரம் இங்கே முதன் முதலில்
தோன்றியது. இத் தூபி அலங்காரத்தின் அடிப்படை
இந்து மதத்தைச் சார்ந்ததாகும். இந்து நதிப் பள்ளத்தாக்
கில் அரப்பா, மொகஞ்சதாரோ என இரு பட்டினங்கள்
மிகவும் புராதன நாகரீகப் பட்டினங்களாக இருந்தன.
இந்த இடங்களில் புதை பொருள் ஆராய்ச்சியின் போது
ஆராய்ந்த சிவன் கோவிலில் இத் தூபி அலங்காரம் காணப்
படுகின்றது. இவைகளின் கால எல்லை இற்றைக்கு 11 ஆம்
நூற்றாண்டுகளுக்கு முந்தியது. இத்தூபியின் தோற்றத்தை
இந்து மத தூபி போலல்லாது மட்டமாக சமாதியின் தூபி
போல ஆக்கியிருந்தார்கள். இத் தூபியில் புத்தபிரானின்
உருப்பு ஏதாவது ஒன்றை அடக்கியிருப்பதாகக் கூறுகின்றார்
கள். ருவன்வலிசாயாவின் பொன் முடியும், அசோகன்
மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டுள்ள முடி போலுள்ளது.
நான்கு வாயில் கட்டமைப்பும் அங்கு எழுதப்பட்டிருக்கும்
சீவிய வரலாறும் வட இந்திய முறையில் அமைத்திருக்கின்
றார்கள். இதைச் செய்த சிற்பிகள் இலங்கையிலிருந்தவர்
களல்லர். அநுராதபுரத்திலுள்ள தூபராமாவின் வெளிப்
புறத் தூண்கள் அசோக மன்னன் காலத்துத் தூண்களைப்
பிரதி பண்ணிச் செய்யப்பட்டவையாகும். இக்காலமே —
நுண் கலை இலங்கையில் முதன் முதலாக ஆரம்பித்த காலம்.

பிரதான அமைப்பு வட இந்திய சிற்ப முறையில்
கோவில்கள் டகோபாக்களிலும் அமைக்கப்பட்டது. அசோக
மன்னனால் ஆக்கப்பட்ட கோவில் தூண்களைப் போன்று
அமைக்கப்பட்டிருக்கின்றன. தூபராம, ருவன்வலி சாயா,

அசோகன் இந்தியாவை ஆண்ட காலத்தில் இலங்கையில் கட்டப்பட்ட புராதன கோவில்களாகும்.

## அநுராதபுரக் காலத்தில் கட்டப்பட்ட புத்த கோவில்களும் அதைக் கட்டிய அரசர்களின் பெயர்களும்.

| பெயர் | கட்டிடத்தின் பெயர் | இடம்: |
|---|---|---|
| தேவநம்பியதீசன் | தூபராமதாதுகோபம் | அநுராதபுரம் |
| தேவநம்பியதீசன் | ஈஸ்வரமுனிய தேவாலயம் மகியங்கனை தூபம் | அநுராதபுரம் |
| பல்சதீசன் பெருப்பித்துத் திருத்தங்கள் செய்தான். | தந்ததாது கோபம், மிருந்த லே | அநுராதபுரம் |
| வர்த்தகாமினி அபயன் | அபயகிரி தாதுகோபம், இலங்கராம தூபம், தக்கண தூபம் | அநுராதபுரம் |
| மகாசேனன் | சேதவனராம தாது கோபம் | அநுராதபுரம் |
| துட்டகைமுனு | மிருசுவெட்டி தாது கோபம், லோகமகா பாய, ருவன்வலிசாய மகாதூபம், ஆயிரம் கால் மண்டபம். | அநுராதபுரம். |

## பொலநறுவைக் கட்டிடங்கள்

| அரசனின் பெயர் | கட்டிடத்தின் பெயர் | இடம் |
|---|---|---|
| 1ஆம் பராக்கிரமபாகு. | கல்விகாரை | பொலநறுவை |
| 1ஆம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்டு நிசங்க மல்லனால் திருத்தப்பட்டது. | வட்டதாகே | பொலநறுவை |
| நாகராஜ துவாரபாலகா | வட்டதாகேயில் காணலாம் | பொலநறுவை |
| 1ஆம் பராக்கிரமபாகு. | சிரி விகாரை | பொலநறுவை |
| 1ஆம் இராஜ ராஜ சோழன். | 1ஆம் சிவன் கோவில் | பொலநறுவை |

## பொலநறுவைக்காலம்.

அநுராதபுரக் காலம் வட இந்தியாவுடன் தொடர்பானது போல் பொலநறுவைக்காலம் தென் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுள்ளது. கி.பி. 10-17 ஆம் நூற்றாண்டில் சோழர் இலங்கையின் சிறந்த பாகத்தைக் கைக்கொண்டனர்.

உறுகுணைப் பகுதியிலிருந்து சிற்றரசர்கள் வந்து தொல்லை கொடுக்கக் கூடும் என்ற காரணத்தால் உறுகுணையிலிருந்து அநுராதபுரத்திற்கு வரும் பாதையிலிருந்த பொலநறுவையை சோழர் இராஜதானியாக்கினர். அநுராத புரத்தில் சிங்களவர் இந்துக்களை ஆதரித்து வந்தமையை இட்டு சோழரும் சிங்களவரை ஆதரித்தனர். அப்போது திராவிட நுட்ப சித்திர வேலைகளே இடம் பெற்

திருந்தன. பெரிய பராக்கிரமபாகு காலத்தில் சோழர் முறியடிக்கப்பட்டனர். அதனால் சிங்களவர் பொலநறுவையை இராஜதானியாக்கினர். அக்காலத்தில் அரச குடும்பப் பெண்கள் குறைவாக இருந்தமையால் சிங்கள மன்னர் கலிங்க தேசத்துப் பெண்களை மணக்க நேர்ந்தது. அவர்களுக்காக இந்து தேவாலயங்களும் பக்கத்தில் புத்த ஆலயங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அவ்வாலயங்கள் அமைப்பதற்கு இந்தியாவிலிருந்து சிற்பிகள் அழைக்கப்பட்டிருந்தனர். அவ்வாலயங்கள் அவர்களின் சிற்ப சித்திரத் திறனை காட்டியுள்ளது. பௌத்த சித்திரங்களுக்கிடையே இராமர் கிருஷ்ணர் முதலியோரின் சரித்திர சித்திரங்களும் தீட்டப்பட்டுள்ளன. அதன் பின் இலங்கையில் படிப்படியாக இவை குறையத் தொடங்கியது. 18 ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட சிற்பங்கள், வரைந்த சித்திரங்கள் பாவமற்ற சித்திரங்களாகக் காணப்பட்டன.

புராதன பௌத்த ஆலயங்களின் முன் வாசலில் படிகள் அமைக்கப் பெற்று இரு பக்கங்களும், சந்திர வட்டக் கல்லும் நிறுவப்பட்டிருந்தன. பூர்வீகமான காவற்கற்களில் நிறை குடங்கள் தென்னம்பூவோடு வைக்கப்பட்ட பாத்திரங்கள், செதுக்கப்பட்டிருக்கின்றன. நிறைகுட காவற்கல் முறை அமராவதி சிற்பத்தின் ஒரு அம்சமாகும். இம்முறையானது இலங்கையில் 2ஆம் நூற்றாண்டில் பரவியிருக்கலாமெனக் கருதப்படுகின்றன. மாசதலடைந்த காவற்கற்கள் வாமன உருவத்துடன் இக்காலத்தில் காட்சியளிக்கின்றன. இவ்வித உருவங்கள் பொலநறுவை புதை பொருள் ஆராய்ச்சியில் அகப்படாததால் அநுராதபுரக் காலத்துடன் நின்று விட்டதெனக் கருதலாம். காவற் கற்களில் மிகவும் சிறந்தவை அநுராதபுரத்தில் தோண்டி எடுக்கப்பட்ட நாகராஜ உருவமாகும்.

## கண்டிய காலம்.

14 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகி 18 ஆம் நூற்றாண்டுடன் முடிவடையும். பொலநறுவைக் காலத்தின் பின் இலங்கை அரசர் தம்பதேனியா, குருநாகல், கோட்டை,

கம்பளை, யாழ்ப்பாணம், சீத்தாவாக்கை முதலிய
இடத்திலிருந்து ஆட்சி செலுத்தி வந்தனர். கடைசியாக
சுதந்திர இலங்கை அரசு கண்டி நகரில் நடந்தது. கண்டி
யில் பௌத்த ஆலயம் இரு மடங்குள்ள ஆலயமாக விமல
தர்ம சூரியன் எனும் அரசனால் கட்டப்பட்டது. 14 ஆம்
நூற்றாண்டின் பின் இலங்கையில் சிறந்த சிற்ப ஆலயங்கள்
அமைக்கப்படவில்லை. 4ஆம் விஜயபாகு யாப்பகுவாவைக்
கட்டுவித்தான். யாப்பகுவ சிற்ப முறைகள் பாண்டிய சிற்ப
முறையில் அமைந்துள்ளன. அங்கு காணப்படும் கஜசிம்மக்
சிலைகள் தூண்கள், நடனச் சிற்பங்கள் என்பன பாண்டிய
காலத்திற்கேற்பன. 14 ஆம் நூற்றாண்டில் நான்காம் புவ
னேகபாகு ஒரு சிறு குன்றில் இலங்காதிலக விகாரையைக்
கட்டுவித்தான். அது செங்கற்களால் அமைந்துள்ளது.
பொலநறுவைக் காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயங்களைப்
போலவே இதன் அமைப்பு இருப்பினும் மூலஸ்தானத்திற்கு
முன் இரு மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாலயத்
தின் நிலப் படத்தைப் பார்த்தால் கர்ப்பக்கிரகம் அர்த்த
நாலய அர்த்த மண்டபம் ஆகியவற்றுடன் அமைந்துள்ளன.
இது ஒரு சைவ ஆலயத்தை நினைவூட்டுகின்றது.

கர்ப்பக்கிரகத்தில் புத்த திருவுருவமும், உட்
சுற்று பிரகாரத்தில் வேறு தெய்வ வடிவங்களும் வைக்கப்
பட்டிருக்கின்றன. கடலதெனிய விகாரை 4ஆம் புவனேக
பாகுவினால் கட்டப்பட்டது. இவ்வாலயம் கணேசாச்சாரி
என்னும் தென்னிந்தியச் சிற்பியினால் கட்டப்பட்டது என்று
கூறப்படுகின்றது. அது முழுவதும் கருங்கல்லால் அமைந்
துள்ளது. இலங்கையில் அமைந்துள்ள கருங்கல் விகாரை
இவையாகும். கண்டியிலுள்ள அத்தானி மண்டபத் தூண்களும்,
இந்த ஆலயத் தூண்களும் ஒரே வித அமைப்புடையன.
தென் இந்திய நாயக்க மன்னர்கள் கட்டிடத் தூண்களும்
கல்லால் அமைக்கப்பட்டவை. கண்டியிலுள்ள எம்பக்கே
தேவாலயத் தூண்களும் நாயக்கர் மரபில் செதுக்கப் பட்
டவையேயாகும்.

<u>கொழும்பு நகர்க்காலம்.</u>

19 ஆம் நூற்றாண்டின் பின் பௌத்த ஆலயங்கள்
பழைய முறையில் கட்டப்படவில்லை. ஆனால் பழைய

ஆலயங்களும் தாது கோபங்களும் திருத்தப்பட்டு வருகின்றன. களனிய விகாரை முற்றிலும் புதுப்பிக்கப் பட்டுள்ளது. கொழும்புக்காலத்தில் பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம் முழுவதும் கருங்கல்லால் சேர் பொன்னம்பலம் இராமநாதனால் அமைக்கப் பட்டது. களனி விகாரையில் ஓவியங்களைத் தீட்டிய ஓவியரின் பெயர் சோலியஸ் மென்டிஸ் ஆகும்.

<u>சிகிரியா.</u>

சிகிரியாக்குகை அநுராதபுரத்தில் உள்ளது. இதன் உயரம் 720 அடியாகும். காசியப்பன் காலத்தில் இக்குகை ஓவியங்கள் வரைவிக்கப்பட்டன. அஜந்தாக் குகை ஓவியங்களைப் பின் பற்றி வரைந்திருக்கலாம் என சரித்திரம் கூறுகிறது. இக்குகை ஒரு இயற்கை அரணாகும். 5ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. இக்குகையிலே 21 பெண் உருவங்கள் தனித்தனி உருவங்களாகவும் சோடி சோடியாகவும் வரையப்பட்டுள்ளன. இக்குகையிலே காணப்படும் மேற்புற ஓவியங்கள் உடைந்து காணப்படுகின்றன. மற்றைய பகுதிகளிலுள்ள ஓவியங்கள் பழுதடைந்து போகாமல் புதை பொருள் ஆராய்ச்சியாளர் இன்றும் பாதுகாத்து வருகின்றனர்.

இங்கே வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் பெண் உருவங்களாகவே உள்ளன. காசியப்ப மன்னனின் மனைவிமார்களே இப்பெண் ஓவியங்களாகும் கூறப்படுகின்றது. இங்கே உள்ள ஓவியங்கள் இரேகைகளைக் கொண்டே மிகவும் நுணுக்கமாக வரையப்பட்டுள்ளன. அவை மிகவும் வேகமாகவும் வரையப்பட்டுள்ளதென ரேகை அமைவிலிருந்து தெரிகின்றது. உருவங்கள் யாவும் திரட்சியையும் அழகையும் பிரதிபலிக்கக் கூடிய நுட்பமான முறையில் வரையப்பட்டுள்ளன. அஜந்தாவில் 16ஆவது குகை ஓவியங்களை ஒத்ததாகவுள்ளது. இவ் ஓவியங்களுக்குப் பாவிக்கப்பட்ட வர்ணங்கள் யாவும் இயற்கைப் பொருட்களான இலை, குழை, நிறக்கற்கள், வேர் போன்றவைகளிலிருந்து தயாரிக்கப்பட்டவை. இன்றும் நிலைத்து உள்ளது.

சிகிரிய குகை ஓவியங்களை அண்மையில் பழுது பார்த்துத் திருத்தம் செய்த ஓவியர் இத்தாலியைச் சேர்ந்த லூன்சி மாரன்சி என்பவராவார்.

## சந்திர வட்டக்கல்.

சந்திர வட்டக்கல் சிங்களவரின் கலைத்திறனை எடுத்துக் காட்டும் ஒரு ஆக்கம் ஆகும். தாகபங்களிலுள்ள படிக்கட்டு வரிசைகளின் அடியிலும் முக்கிய பௌத்த மண்டபங்களின் வாசலின் முன்னும் அரைவட்ட வடிவில் அமைந்திருக்கும். இவை கருங்கல்லில் தாழ் புடைப்புச் சிற்ப முறையில் அமைக்கப் பட்டவையாகும். அலங்காரங்களின் பொருளியல்புகள் பின்வருமாறு.

சந்திர வட்டக் கல்லின் மத்தியில் அரைத்தாமரை இருக்கும். அதனை அடுத்து அன்னங்களைக் கொண்ட வரிசை காணப்படும். அதனை அடுத்துள்ள வரிசையில் கொடி, இலைகளாலான வேலைப்பாட்டைக் காணலாம். அடுத்த வரிசைகளில் யானை, சிங்கம், குதிரை, எருது போன்ற நான்கு மிருகங்கள் ஒன்றை ஒன்று துரத்துவது போன்ற வகையில் அமைந்துள்ள செதுக்கங்களைக் காணலாம். இறுதி வரிசையில் தீச் சுடர் இருப்பதைக் காணலாம். இத்தகைய சிற்ப அலங்காரங்கள் நிறைந்த உறுதி வாய்ந்த மாபெரும் கட்டிடங்கள் நிலவுவதற்கு அக்காலத்தில் நாட்டில் நிலவிய செழிப்பு மட்டும் காரணமல்ல. சூட்சித்திறம் வாய்ந்த மன்னர்கள் ஒழுங்கான நிர்வாக முறையை ஏற்படுத்தியதுமே ஒரு காரணமாகும். இலங்கையில் மிக அழகு வாய்ந்த சந்திர வட்டக்கல் அநுராத புரத்திலுள்ள ராணி மாளிகையின் முன் உள்ள சந்திர வட்டக் கல் ஆகும்.

பொலநறுவைக்காலத்தில் அமைக்கப்பட்ட சந்திர வட்டக் கல்லில் எருது நீக்கப்பட்டுள்ளது. காரணம் பொலநறுவைக் காலத்தில் சோழர் ஆட்சி, சோழர் சைவ சமயத்தவர். சிவனின் வாகனம் எருது. இதனால் கால்படும் இடத்தில் சிவனின் வாகனம் இருப்பதை விரும்பாமல் எருதை நீக்கி சந்திர வட்டக்கலை அமைத்தனர்.

தொலுவில புத்தர் சிலை.

அநுராத புரத்தில், தொலுவில என்ற கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட இச் சிலையைக் கொழும்பு நூதன சாலையில் காணலாம். அமர்ந்திருக்கும் நிலையிலுள்ள இச்சிலையின் அகலம் 5 அடி 9 அங்குலமாகும்.

ஆயிரம் கால் மண்டபம்.

ஆயிரங்கால் மண்டபம் அநுராதபுரத்தில் உள்ளது. ஆயிரங்கால் மண்டபம் எனக் கூறப்படும் லோவ மகாபாயா 150 அடி நீளமும் அகலமும் உடையது. ஒன்பது மாடங்களையும் ஆயிரம் அறைகளையும் கொண்டது. கருங்கல்லாலான 1600 தூண்களைக் கொண்டது. செப்புத் தகடுகளால் வேயப்பட்டமையால் இது செப்பு மாளிகை என்றும் அழைக்கப்பட்டது. இதில் பிக்குகள் தங்கியிருந்து பௌத்த மத தர்மத்தைப் போதித்தனர். அவ்வழகிய மாளிகை காலக்கிரமத்தில் அழிந்து போகச் சில தூண்கள் மாத்திரமே இன்று காணப் படுகின்றன. ருவன்வெலி சமாதி கெமுனுவால் ஆரம்பிக்கப்பட்டபோதும் அவனது தம்பி சதாதீசனாலேயே பூரணமாக்கப்பட்டது. இது 300 அடி உயரமுடையது.

ருவான் வலி சாயா.

ருவான் வலி சாயா அநுராதபுரத்தில் உள்ளது. இதன் வடிவம் நீர்க்குமிழி வடிவம் ஆகும். ருவான் வலி சாயா மகா போதி என்னும் வெள்ளரசுக் கோவிலுக்கு வட புறமாகச் செல்லும் வீதியிலே உள்ளது. இது கட்டகெமுனுவினால் கி.மு. 147 இல் கட்டுவிக்கப்பட்டது. இது தோப தூபம் என அழைக்கப்படும். இத்தாகபத்தின் புத்தரின் தாதுப் பொருட்களும் செல்வங்களும் வைக்கப்பட்டுள்ளதென்றும் வருடா வருடம் அரசன் செய்யும் விழாவில் வெளி நாட்டிலிருந்து புத்த பிக்குகள் வந்து வழிபட்டுச் சென்றார்களென மகாவம்சம் கூறுகின்றது. இத்தாகபத்தைத் தாங்கி நிற்கும் பாலை

யில் கொத்தப் பட்ட யானைகள் பொறிக்கப்பட்ட சிலைகளையும் சுவரில் காணலாம். இத்தாகபத்தைச் சுற்றி, பூக்கள் வைத்து வணங்குவதற்குரிய மண்டபங்கள் அமைந்திருக்கின்றன. அம் மண்டபங்களை " வாஉறல் கடவை " என்பார்கள். தாகபத்தின் ஒரு புறத்தில் விக்கிரக அறையுண்டு. அங்கு அவர்களின் யாதகக் கதைகள் எல்லாளன் துட்டகைமுனுவின் யுத்தம் முதலியவை ஓவியமாகத் தீட்டப்பட்டிருத்தலை அவதானிக்கலாம். அங்குள்ள நான்கு விக்கிரகங்களுள் மூன்று அவதாரஞ் செய்த சிலைகள் என்றும், நான்காவது விக்கிரகம், இனிமேல் அவதரிக்க இருக்கும் புத்தரின் சிலையென்றும் கூறப்படுகின்றது. இங்கு இருக்கும் இன்னுமோர் சிலையைத் துட்டகைமுனுவின் சிலை என்றும் சிலர் உதித்வ கடவுளின் சிலை என்றும் கூறுவர்.

தூபராம தாகபம்.

ருவான் வலி சாயாவிற்குச் சற்றுத் தூரத்தில் தூபராம தாகபம் உண்டு. இது மணி வடிவை உடையது. இதைச்சுற்றி வர அழகு பொறித்த எழுத்துக்களுடன் அமைந்தது. சிற்றூண்கள் வரிசை வரிசையாக உண்டு. இத்தாகபம் தேவநம்பிய தீசனால் கட்டப்பட்டது. இத்தாகபத்தினுள் புத்த பகவானுடைய தோள்ப்பட்டை எலும்பு சேமித்து வைக்கப்பட்டுள்ளதென்பர். ஆதி காலத்தில் இத் தாகபம் யாத்திரீகர்களால் ஒரு சிறந்த தலமாகக் கொள்ளப்பட்டு வந்ததென்று மகாவம்சம் கூறுகின்றது. தூபராம தாகபத்தில் வச்சிராயுத வீடு என அமைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றும், பின்புறத்தில் கொத்த வேலைகளால் பழைய கலை முறையில் செய்யப்பட்ட காவற்சிலை ஒன்றும் உண்டு. இங்கு அழகிய ஓர் ஆலயம் உண்டு. இவ்வாலயத்தின் அமைப்பு, சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய கொத்து வேலைகள் கலை நுணுக்கம் வாய்ந்தவை. அங்குள்ள சிற்பங்கள் காட்டும் சித்திரங்கள் சிங்கங்கள், மான், மயில், குரங்கு, கிளி, போன்றவைகள் கண் குளிரும் காட்சியாக அமைந்துள்ளது. இத்தாகபத்திற்கு வடக்கே ஒர் இந்துக் கோவில் அமைந்திருக்கின்றது.

## அபயகிரி தாகபம்

அபயகிரி தாகபம் அநுராதபுரத்தில் உள்ளது. வாலகம்பாகு பௌத்த சமயவளர்ச்சிக்குப் பெரிதும் முயன்றான். அபயகிரி விகாரையைக் கட்டுவித்தான். இதுகாறும் எழுதாமறையாக ஒருவரிலிருந்து மற்றவர் கேட்டறிந்து வந்த பௌத்த மத தர்மங்களையெல்லாம் திரிபிடகம் என்ற நூலாக எழுதுவித்து, என்றும் அழியாப் புகழையும் புண்ணியத்தையும் பெற்றான். இதன் உயரம் 350 அடியாகும்.

## இசுருமுனி விகாரை

இது அநுராதபுரத்தில் உள்ளது. தேவநம்பியதீசனால் கட்டப்பட்டது. இந்த விகாரை வர்ணம் தீட்டப் பட்டு விளங்குகின்றது. வலதுபுறம் சரிந்த நிலையில் துயில் கொள்ளும் புத்த பெருமானின் அழகான உருவம் வர்ணம் தீட்டப் பட்டுள்ளது. சுவர்களில் சமயப் பெருமை பற்றிய சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. அழகான சிற்பச் சிலைகளும் உள்ளன. பக்கத்தே ஒரு தடாகமும் யானைகளின் தோற்றச் சித்திரமும் அழகாக அமைந்திருக்கின்றன. இவற்றை விட, புகழ் பெற்ற காதலர் சிலையும் உண்டு. இதை ஒரு தம்பதியர் சிலையென்றும் அழைப்பர். இச்சிற்பம் அரை புடைப்புச் சிற்பம்; கருங்கல்லில் பொழியப்பட்டது. இது குப்த சிற்ப முறையில் அமைந்துள்ளது. இது இலங்கையில் அழகு வாய்ந்த சிற்பங்களில் ஒன்றாகும். மனித வடிவமும், குதிரைத் தலையும் கருங்கல்லில் பொழியப்பட்ட அரைபுடைப்புச் சிற்பமும் ஒன்று உண்டு. இது பல்லவ முறையில் அமைந்துள்ளது. இதைவிட அங்குள்ள குளத்தைச்சுற்றி யானைத்தலைகளும் பொழியப்பட்டுள்ளன. இவையும் பல்லவ மரபைச் சார்ந்தவையே.

## சமாதி நிலை புத்தர்.

இது அநுராதபுரத்திலுள்ள மஹாமேவுனா என்ற பூந்தோட்டத்தில் அமைந்துள்ளது. கருங்கல்லில் பொழியப்பட்டது. இச்சிலையின் முடி சுருள் சுருளாக அழகாக அமைந்துள்ளது.

N. DIVAKALALA



இந்த உருவம் "வீர ஆசனம்" என்று அழைக்கப் படும் அமரும் நிலையில் அமைந்திருக்கின்றது. இதன் கைகள் தியான முத்திரையைக் குறிக்கின்றன. இச்சிலையின் முகபாவம் மிகவும் சாந்தமாக அழகாக அமைந்துள்ளது.

## அவுக்கன புத்தர் சிலை. 566

இது அநுராதபுரத்தில் கலாவெவ என்ற ஆற்றுக்கு அருகில் அவுக்கன என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இச் சிலை மிகப்பெரிய பாறையில் செதுக்கப்பட்டது. பாதங்கள் அமையும் பீடம் தாமரை அலங்காரம் பொருந்தியது. இச்சிலையின் முக பாவம் மற்ற சிலையிலும் வேறுபட்டது. தலையில் காணப்படும் "சிரஸ்பொத்த" என்னும் தெய்வீக அம்சம் கவனத்திற்குரியது. உதடுகள் அழகாக அமையப் பெற்றது. ஆனால் மூக்கு அகலமாகக் காணப்படுகின்றது. கழுத்து மிகவும் விறைப்பாகவும் குட்டையாகவும் காணப் படுகின்றது. இது 45 அடி உயரமுடையது. ஒரு கை, கதககஸ்ர முத்திரையையும் மறு கை, அசிஸ்த முத்திரையையும் குறிக்கின்றது. ஒரு பெரிய பாறையில் எந்தவிதப் பொருத்தமுமின்றி இப்பெரிய சிலை பொழியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பராக்கிரமபாகு சிலை (பொலநறுவை)

பொத்கல் விகாரைக்குச் சமீபத்திலுள்ள பாறையில் இச்சிலை செதுக்கப்பட்டுள்ளது. இவ்வடிவம் இலங்கையிலுள்ள சிறந்த சிற்ப வடிவங்களுள் ஒன்றாகும். இது முதலாம் பராக்கிரம பாகுவின் வடிவம் எனக் கருதப்படுகின்றது. இவ்வடிவம் ஒரு முனிவரின் தோற்றத்துடன் காட்சியளிப்பதால் அது புலஸ்திய முனிவரின் வடிவமெனக் கருதுவாருமுளர். பழைய நூல்களில் பொலநறுவை - புலஸ்திய நகரமென்னும் பெயர் பெற்றுள்ளது. அவ்வடிவம் யாரைக் குறிக்கின்றதென்பதை இதுவரை எவரும் அறுதியிட்டுக் கூறவில்லை. பராக்கிரம பாகு ஒரு முனிவரின் வடிவத்துடன் ஏட்டைத் தாங்கிய கைகளுடன் நிற்பதன் காரணம் இதுவரை எதுவும் கூறப்படவில்லை.

131553

காவற்கல் அல்லது காவற் சிலை.

காவற் கல் அல்லது காவற் சிலை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

1. கல்
2. கலசம்
3. ஐந்து தலைப் பாம்பு
4. கணங்கள்
5. குள்ளர் வடிவம்
6. காவற் சிலை.

காவற் சிலைகள் - ரத்தினப் பிரசாத (அநுராதபுரம்)

இக்கல்லில் காணப்படும் திருவாசியை மகரத்தினும், பாம்பின் மாய திரிபுகளைக் கொண்டும், அலங்காரம் செய்யப்பட்டுள்ளன. அழகிய முடியும், நிரப்பிய கையும், உடல் நிறைந்த ஆபரணமும், உடையும் - எல்லாம் நிறைவையும் செழிப்பையும் குறிக்கின்றன. எல்லா நன்மைகளையும் கொடுக்க முன் வந்திருப்பதையும் குறிக்கின்றன. முகம் மொங்கோலியச் சாதியினரைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றது. திருபங்க முறையில் அமைக்கப்பட்டது.

மிருந்தலை கந்தக தாகபம் -- அநுராதபுரம்.

இலங்கையில் உள்ள மிகப் பழைய தாது கோபுரங்களில் ஒன்றாகும். இதில் காணப்படும் வாசற் கடவைகள் மிகச்சிறந்த சிற்ப நுட்பங்கள் பொருந்தியன. இதன் காலம் கி.மு. 59 - 50 வரைக்கும் ஆகும். லஞ்ச தீசன் என்னும் அரசன் இதைப் பெருப்பித்துச் சில திருத்தங்களைச் செய்வித்தான். தற்போது மிருந்தலை மலையில் பழையதும் புதியதும் ஆகிய இரு தாகபங்கள் காணப்படுகின்றன.

சிந்தகல.

ஐந்தாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதெனக் கருதப் படுகின்றது. உயரிய பெரிய மலையொன்றில் குகை ஒன்று உண்டு. இங்கு ஜாதகக் கதைகள் தீட்டப்பட்டுள்ளன. அழிந் தொழிந்த சுவர் ஓவியங்கள் காணப்படுகின்றது. இவ்வோ வியங்கள் சிறிய முறையில் தீட்டப்பட்டுள்ளன.

படுத்திருக்கும் நிலையில் சுமார் 27 அடி உயர முள்ள புத்த சிலை ஒன்று உண்டு. இவ்விகாரையுள்ள பிரகாரத் தில் சுவர்களில் அமைந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை வலகம்பா அரசன் காலத்தன எனக் கருதப்படுகின்றன. இது கண்டியில் உள்ளது.

கல்விகாரை.

இது பொலநறுவையில் உள்ளது. 12ஆம் நூற்றாண் டில் அமைக்கப்பட்டது. இங்கு மூன்று நிலைப் புத்தரும் ஒருங்கே காணப்படக் கூடியதாக உள்ளது. அவையாவன, நிலைப் புத்தர், உறங்கு நிலைப்புத்தர், சமாதி நிலைப் புத்தர் என்பனவாகும். இவ்விகாரை 1ஆம் பராக்கிரம பாகுவினால் கட்டப்பட்டது.

பரிநிர்வாணமடைந்த உறங்குநிலைப் புத்த பகவானின் சிலை தலையணையின் மேலுள்ள வலது கரத்தின் மேல் மூடிய கண்களுடன், மலர்ந்த முகத்துடன், பரிநிர்வாண நிலையில் உள்ளது போன்று அமைந்துள்ளது. இது 46 அடி நீளமுள்ளது. நிலைப் புத்தர் வடிவம், இரு கைகளையும் மார் போடணைத்த நிலையில் பெண் சாயலில் அமைந்துள்ளது. இச்சிலை புத்த பெருமானின் முக அமைப்பில் சிறிது வேறு பட்டிருப்பதால் சீடர் ஆனந்தருடைய சிலை எனக் கருதுகின் றனர்.

யாப்பகுவ

இலங்கையின் புதைந்த நகரங்களுள் ஒன்று யாப்பகுவ. வடமேல் மாகாணத்தில் மாகோவிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளது. "மாக" என்ற கலிங்க தேசத்து மன்னன் இலங்கையிலிருந்து அரசாண்ட காலத்தில் கி.பி. 1219ஆம் ஆண்டிலே "சுப" என்ற அவனது சேனாதிபதி இவ்வரசனின் போக்கைக் கண்டு வெறுப்படைந்து யாப்பகுவை மலைப் பாறையைச் சூழ கோட்டையாக்கித் தனது சகாக்களுடன் வந்து குடியேறினன். இவன் காலத்திலிருந்து 100 வருடங்கள் சென்ற பின் சிங்களவர் ஆட்சி தொடங்கியது. பின்பு அதை சந்தபானு என்ற தமிழ் அரசன் கைப்பற்றினன். இங்குள்ள விசேட சிற்பத்தின் சிறப்பு மகர தோரணமும் அதன் வாசலின் அமைப்புமேயாகும். இங்குள்ள கல் யன்னலும், கண்டெடுக்கப்பட்ட நாட்டியப் பெண்ணின் சிற்பமும் சிறப்பு வாய்ந்தவையாகும். இச் சிற்பம் கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையிலுள்ள மற்றெல்லாச் சிற்பங்களையும் விட இச் சிற்ப வேலை வேறுபட்ட நிலையில் அமைக்கப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. 4 அடி 7 அங்குல நீளமும் 3 அடி 3 அங்குல அகலமும் 7 அங்குல கனமும் உள்ள இந்த யன்னல் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இக்கல்லில் "ராஜ் மகால்" சிற்ப முறையைப் பின் பற்றி, 45 உருவங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. இந்த நடனப் பெண்களின் உருவங்களும் சிற்பங்களும் தாமரைகளும் செதுக்கப் பட்டிருப்பதால் இது யாப்பகுவ காலத்தின் தனிச் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது.

பொலநறுவைச் சிவன் கோவில் (முதலாவது)

இவ்வாலயம் முதலாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. இதன் மறுபெயர் வானவன் மாதேவி ஈஸ்வர முடையார். இலங்கையிலுள்ள மிகப் பெரிய சோழ கட்டிடம் இதுவேயாகும். முழுவதும் கருங்கல்லினால் கட்டப்பட்டு உள்ளது. இது கட்டப்பட்ட காலம் 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

## இலங்காதிலக ஆலயம்.

இக்கோவில் ஒரு மலை உச்சியில் உள்ளது. இக் கோவிலுக்குப் போவதற்குப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கோவில் கடலதேனிய காலத்தில் கட்டப்பட்டதால் 14ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதெனக் கொள்ளலாம். இது புத்த சமய அடிப்படையைத் தழுவிக் கட்டப்பட்டதாகும். உள் கோவிலுள் அமர்ந்திருக்கும் நிலையிலுள்ள பெரிய புத்தர் சிலையும் இரண்டு பக்கங்களிலும் நிற்கும் நிலைப் புத்தர் சிலைகள் இரண்டும் உள்ளன.

இங்குள்ள சுவர் ஓவியங்கள் யாதகக்கதையைத் தழுவியதாகும். இங்கு சிவனொளிபாத மலையின் தோற்றம், மிருகங்கள், மசியங்களைத் தேவாலயத்தில் சித்தரிக்கப் பட்டுள்ளதைப் போன்ற ஓவியங்களும் மேற் கூரையில் கொடி சித்திரங்களும் சித்தரிக்கப் பட்டுள்ளன. ஆலயத்தில் அருகே உள்ள கற்பாறையில் சிலாசனம் பொறிப்பப்பட்டு அதில் ஒரு பகுதி சிங்களத்திலும் ஒரு பகுதி தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

## தலதா மாளிகை.

தலதா மாளிகையின் மறு பெயர் புனித தந்த ஆலயம் ஆகும். இதை விமலதர்ம சூரியன் கட்டுவித்தான். இங்கு புத்த பிரானின் புனிதப்பல் ஒன்றை வைத்து இக் கோவிலைக் கட்டியதால் புனித ஸ்தலமாக விளங்கி வருகின்றது. இது கண்டி அரசர் காலத்தில் கட்டியதாகும். இங்கு தற்காலத்தில் செய்யப்பட்ட மரச் செதுக்கு வேலைகளைக் காணலாம். மாளிகையின் மேற் கூரையில் அழகுற அலங்கார வேலைகளால் செதுக்கு வேலை செய்துள்ளனர். சுவர் ஓவியங்களும் வியக்கத்தக்க முறையில் வரையப்பட்டுள்ளன. கதவுகள் பூராகவும் நுண்ணிய வேலைப்பாடமைந்த அலங்காரங்களைக் காணத்தக்கதாக உள்ள தலதா மாளிகைக்கருகே உள்ள நூதன சாலையையும் காணலாம். இங்கு கண்டி அரசர்கள் அணிந்த அணிகலன்கள், யுத்த கருவிகள், அக்காலத்தைய மட்பாண்டங்கள், வெண்கலப் பாத்திரங்கள் முதலி

யவை பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தெகல் தொருவ.

தெகல் தொருவ சுவர் ஓவியம் - தெகல் தொருவ கண்டியிலிருந்து 3 மைல் தூரத்தில் அருணகம என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இது 1747 ல் கண்டியை ஆண்ட கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கனால் மொரத்தொட்ட தம்மங்கந்தி என்ற புத்த பிக்குவின் கீழ் அமைக்கப்பட்டது. இவ்விகாரை, கலைஞரையும், அறிஞர்களையும், தொல் பொருள் ஆராய்ச்சியாளரையும் கவர்ந்திருப்பதற்குக் காரணம் இங்குள்ள சுவரோவியமேயாகும்.

18 ஆம் நூற்றாண்டுக் கடைசிப்பகுதியில் சிவிர தேவர கம்பொல சில்வரட்ன உன்னசே என்ற பிக்குவினால் இங்குள்ள ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. விகாரையின் சுவர்களிலும் விதானங்களிலும் ஓவியங்கள் தீட்டப் பட்டிருக்கின்றன. இதில் ஜாதகக் கதைகளும் வெஸ்ஸந்தர அரசனின் ஜாதகக்கதைகளும் உண்டு. அவற்றில் அரசன் வெள்ளை யானையில் சென்று தானம் கொடுத்தல் விசேஷமானது. ஊர்வலமாகச் செல்லும் யானைகள் செல்லும் முறையைப் பார்க்கும் போது உண்மையில் யானைகள் நடப்பது போன்ற பிரமை ஏற்படும். தானம் கொடுக்கும் சித்திரத்தில் ஜூஜக-பமுனு என்பவன் அரசனின் குழந்தையைக் கேட்ட பொழுது அரசன் தன் குழந்தையைப் பரிசாகக் கொடுக்கும் காட்சியைப் பார்க்கும் போது பார்ப்போரைப் பச்சாதாபத்தில் ஆழ்த்திவிடும். இதைத் தவிர சீலவ ஜாதகம், சுத்த சோம ஜாதகம், சமேதக ஜாதகம் ஆகியவையும் உண்டு. இவ் வோவியங்களின் கீழ் லியபெத்த போன்ற அலங்காரங்கள் காணப்படும்.

கர்ப்பக்கிரகத்தின் விதானத்தில் உள்ள ஓவியத்தில் புத்த பகவான் முக்தியடையும் நிலையையடையும் போது யமனும், பேய் பிசாசுகளும் வந்து அதைத் தடை செய்யும் காட்சியும் பார்ப்போரைப் பரவசப் படுத்தும். இன்னும் கற்பனைக்கேற்ற மலர் கொடிகள் வரையப் பட்டுள்ளன. அதில் பாரிஜாத மலரும் உண்டு.

இதில் "பிட்டிய தெய்யோ" என்ற தேவதையின் ஓவியமும், கலே பண்டார என்ற தேவதையின் ஓவியமும் உண்டு. இங்குள்ள ஓவியங்களில் வசந்தரா ஜாதகக் கதை விசேடமானது. இவ்வோவியத்திலேயே வெள்ளை யானையில் அரசன் பிள்ளையைப் பரிசளிப்பது வரையப் பட்டுள்ளது. சுவரில் நான்காகப் பிரித்து இவ்வோவியம் வரையப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தம்புள்ள விகாரை.

இவ்விகாரை வட மத்திய மாகாணத்தில் உள்ளது. இலங்கையில் குகைச்சித்திரத்துக்குப் பிரசித்தி பெற்றது இவ் விகாரையாகும். இது கண்டிய காலத்தைச் சேர்ந்தது. வாலகம்பாகு என்ற அரசன் இதைக் கட்டுவித்தான். சோழர் படை எடுப்பின்போது இங்கு வாலகம்பாகு வந்து தங்கினான். இதற்கு "சீத்தா" என்ற வேடன் உதவி புரிந்தான். இதிலுள்ள விசேடம், இது ஐந்து குகைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது என்பதாகும். அவையாவன,

1. தெவிரட்ட விகாரை
2. மகாராஜ விகாரை
3.
4. பஸ்சிம விகாரை.
5.

முதலாவது விகாரை ( தெவுரட்ட விகாரை)

இதிலிருக்கும் புத்த சிலைக்கு ஒப்பாக இலங்கையில் வேறு எங்குமில்லை. இச்சிலை புத்தர் பரிநிர்வாண நிலையை அடையும் தோற்றத்தைக் காட்டுகின்றது. அருகே விசேட சீடர்களின் சிலைகளுமுண்டு. இன்னும் வேறு சில சம்பவங்களை கொண்ட சிலைகளும் வர்ணச் சித்திரங்களும் உண்டு.

இரண்டாவது விகாரை (மகாராஜ விகாரை)

இதுவே மிகப் பெரிய விகாரை. இங்குள்ள புத்த

சிலை சந்தனக் கட்டைகளாலும் முல்லைக் கட்டைகளாலும் ஆனது. இதிலுள்ள ஓவியங்கள் கீர்த்தி ஸ்ரீ நிசங்க மல்லனால் செய்யப்பட்டது. கீர்த்தி ஸ்ரீ நிசங்க மல்லனின் சிலையும் இங்குள்ளது. இவை பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. விசேட ஓவியங்கள் இரண்டாம் குகையிலே காணப்படுகின்றன.

மூன்றாவது விகாரை.

கீர்த்தி ஸ்ரீ ராஜனின் சிலையும் இங்குண்டு. புத்த சிலைகள் நிற்கும் நிலையிலும், அமர்ந்திருக்கும் நிலையிலும் மரத்தால் செய்யப்பட்டு மண் பூசப்பட்டிருக்கின்றது. இங்கு காணப்படும் ஒரு சிலைக்கு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் தங்கம் பூசியிருந்தான். எனவே இதை, "ரன் கிரி தம்புள்ள" என்றும் அழைப்பர். இங்கு சீவகங்கா எனப்பெயர் கொண்ட ஒரு சிறு தண்ணீர் ஓடை இருப்பதால் தம்புள்ள என்றும் பெயர்பெறும்.

நான்காவது விகாரை.

இது ஒர் பண்டக சாலையாகும்.

நாலந்த கெடிகே.

இது கி.பி ஏழாம் நூற்றாண்டில் பல்லவ முறைப்படி கட்டப்பட்டது. மாமல்லபுரம் (தென் இந்தியா) கட்டப்பட்ட காலத்திலேயே இதுவும் கட்டப்பட்டிருக்கின்றது எனக் கொள்ளலாம். புத்த ஆலயமாகத் தோன்றும் இது பார்வைக்கு கோவில் போலவும், வெளிச் சுற்றுப்பிரகாரத்தினைப் பார்த்தால் விகாரை போலவும் காணப்படுகின்றது. மாமல்லபுரத்திலுள்ள தூண்களின் அமைப்பே இங்கும் காணப்படுகின்றது. இந்தியாவில் நாலந்த என்ற சர்வகலாசாலை இருந்தது. அதன் பெயரையே இதற்கும் வைத்து கல்லால் செய்யப்பட்டதால் சிங்களத்தில் "கெடிகே" என்று பெயரிடப்பட்டது. இதையும் முன்பு சர்வகலாசாலையாக வைத்திருக்கக் கூடும் என ஊகிக்கின்றனர்.

## நிசங்கலதா மண்டபம்.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்டது. உட்புறத்தில் 3 அடி உயர ஒரு தாதுகோபம் இருக்கின்றது. இதில் சுவர கோட்டம் இல்லை. இங்குள்ள மண்டபத் தூண்கள் தாமரைத் தண்டைப் போன்ற அமைப்புப் பொருந்தியவைகளாக விளங்குகின்றன. நிசங்க மல்லனின் கட்டிடம் மிகவும் பிரதானமானது. கற்படி வரிசைகளுள்ளது. நான்கு பக்கங்களிலும் நான்கு வாசல்கள் உண்டு. ஒரு மேடையில் பூவேலையால் ஆக்கப்பட்ட கற்றூண்களும் உண்டு. நிசங்க மல்லனுக்குப் பின் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. பொலநறுவையில் இந்துக் கோயிலும் சோழர் ஆண்ட காலத்தில் உண்டாகின என்பதை இலங்கைச் சரித்திரம் கூறுகின்றது. ஐந்தாம் மகிந்தனுடைய 16 ஆவது ஆட்சியை 1ஆம் விஜயபாகு கைப்பற்றினன். கி.பி. 170 ஆம் ஆண்டில் ஆட்சி செய்தான். பௌத்த தாதுகோபுரங்களையும் புத்தருடைய வடிவங்களையும் அமைப்பித்தான். ஓவியத்தில் திறமை பெற்றிருந்த சிங்கள ஓவியர்களையும் சிற்பிகளையும் பயன் படுத்தினர். சிவபெருமானுக்கும், விஷ்ணுவிற்கும் சிலைகளை அமைத்தனர்.

## கந்தக சைத்திய தாதுகோபம்.

இதைக் கட்டிய அரசன் பெயர் அறியக்கூடியதாயில்லை. கி.மு. 59-50 இல் இருந்த லஞ்சதீசன் சில திருத்தங்களைச் செய்துள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. இது அமைந்துள்ள இடம் மிகுந்தலையாகும்.

## சிராவத்தியின் அற்புதச் செயல்.

இச்சிற்பம் கொழும்பு நூதன சாலையில் உள்ளது. இதுவே இலங்கையில் காணப்பட்ட மிகப் பழைய சிற்பமாகும். இது ஆந்திர சிற்ப முறையில் அமைந்துள்ளது.

மாயாதேவியின் கனவு..

கொழும்பு நூதன காட்சிச்சாலையில் காணப்படுகின்றது. ஆந்திர சிற்ப முறையைத்தழுவிய பழைய சிற்பங்களில் ஒன்று,

பொலநறுவை.

சேதவனராம விகாரை.

முதலாம் பராக்கிரமபாகுவினால் கட்டப்பட்டது. திரிபங்க நிலையையுடைய புத்த வடிவம் கர்ப்பக்கிரகத்தில் இருப்பதனால் "திவங்க" ஆலயம் என்றும் அழைக்கப் படுகின்றது. புத்த ஜாதகக் கதைகளை விளக்கும். 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியங்கள் இவ்வாலயத்தில் உள்ளன. இடம் - பொலந்நறுவை.

வட்டதாகே.

முதலாம் பராக்கிரம பாகுவினால் அமைக்கப்பெற்ற பின் நிசங்க-மல்லனால் பல சிற்பங்கள் சிறப்புடன் புதுப்பிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் சிற்ப ஆலயங்கள் பொருந்திய பௌத்த ஆலயங்களுள் முதன்மை பெறுவது. இடம்- பொலநறுவைக் கோவில் கோட்டம்.

களனியா விகாரை.

20 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய சிற்ப முறையையும் கண்டி நகர் காலச் சிற்ப முறையையும் தழுவிக் கட்டப்பட்ட ஆலயம். இவ்வாலயத்தில் கண்டி நகர் கால ஓவியங்கள் இருக்கின்றன. 20 ஆம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற ஓவியங்கள் புதிய கட்டிடத்தில் இருக்கின்றன.

<u>நீள் சதுரக் கல்.</u>

வாகல் கடங்களின் இரு புறங்களிலும் அமைக்கப்படும் சித்திரங்கள்.

<u>துவார பாலகர்.</u>

இது அநுராதபுரத்திலுள்ள அரச மாளிகையில் காணப் படுவது. முதலாம் விஜயபாகுவின் காலத்தது எனக் கருதப் படுகின்றது.

<u>கைப்பிடி வரிசை.</u>

வாயில்களின் இரு மருங்கிலும் அமைக்கப் பட்டுள்ள சித்திரச் சுவர் அணை.

<u>(1) புத்தர் திரு வடிவம்.</u>

அநுராதபுரத்தில் உள்ள அபயகிரி தாது கோபத்தைச் சேர்ந்த வடிவம்.

<u>(2) புத்தர் திரு வடிவம்.</u>

இவ்வடிவம் பொலநறுவையிலுள்ள கல்விகாரையின் வலது பக்கத்தில் காணப்படுகின்றது.

<u>(3) புத்தர் திரு வடிவம்.</u>

அநுராதபுரத்துப் பங்குளியா சங்கிராமத்தைச் சேர்ந்த வடிவம். அபய கரத்தோடு காணப்படும் இருந்த பாவனையுடைய புத்தர் வடிவம் இலங்கையில் இதுவேயாகும்.

(4) புத்தர் திருவடிவம்.

இது பொலநறுவை வட்டதாகேயிலுள்ளது.

மைத்திரேய போதி சத்துவர்.

இது மகாயான பௌத்த பிரிவைச் சேர்ந்த வடிவம். இவ்வடிவம் திரிபங்க நிலையில், விதர்க்க வரத முத்திரைக ளுடன் அமைந்திருக்கின்றது. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இச்செப்பு வடிவம், அநுராதபுரத்து தூபராம தாது கோபத்தின் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. உயரம் 18.6 அங்குலம். இலங்கையிற் கண்டெடுக்கப்பட்ட சில அழகு வாய்ந்த பௌத்த திரு வடிவங்களில் ஒன்று.

பத்தினி.

வெண்கலத்திற் செய்யப்பட்ட இவ்வடிவம் 8ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தது. விதர்க்க, வரத முத்திரைகளுடையது. மைத்திரேய போதி சத்துவ வடிவத்திற் காணப்படும் விதர்க்க, வரத முத்திரைகள் இதன் கண்ணும் காணப்படுவது அவதானிக் கத்தக்கது. இதன் உயரம் 57.5 அங்குலம்.

நீராடு துறை.

இது அநுராதபுரத்திலுள்ள அரச நந்தவனத்திற் காணப் படும் நீராடு துறையாகும். கண்கவர் வனப்புடன் கருங்கற் களால் அமைக்கப்பட்டுள்ளது. திஸ்ஸ வாவிக்கு அருகிலுள்ளது.

முருகன் ஆலயம்.

இவ்வாலயம் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள திருக்கோவில் என்னும் கிராமத்திலுள்ளது. கீழ்மாகாணத்துப் புராதன ஆலயங் களிலொன்று. பிற்காலச் சோழ, அல்லது பாண்டிய சிற்ப முறையைப் பின்பற்றிய கட்டடமாகக் காணப்படுகின்றது.

சிவமூர்த்தம்.

சிவமூர்த்தங்களிலொன்று கொழும்பு நூதன பொருட் காட்சிசாலையில் இருக்கின்றது. 12ஆம், 13 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது. பொலநறுவை 5ஆம் சிவாலயத்தில் எடுக்கப் பட்டது. உயரம் 26.8 அங்குலம். சிறந்த தென் இந்திய சிற்பங்களிலொன்று.

கஜலக்ஷ்மி.

யாழ்ப்பாணத்து நல்லூர் சட்டநாதர் ஆலயத்தைக் கட்டியபொழுது மண்ணுள் இருந்து எடுக்கப் பட்ட வடிவங்களில் ஒன்று யாழ்ப்பாண நூதனசாலையில் இப்பொழுது இருக்கின்றது. 15ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்ட சிற்ப முறையில் அமைந்துள்ளது.

திவங்க ஆலய ஓவியம்.

பொலநறுவையிலுள்ள சேதவனராமா என்னும் திவங்க ஆலயத்திற் காணப்படும் ஓவியம். 12 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது.

சிம்மாசனம்.

கண்டி அரசர்களின் சிம்மாசனம் கொழும்பு நூதன பொருட் காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது.

வெள்ளிமயிலும் திருவாசியும்.

மயில்வாகனம் யாழ்ப்பாணத்து நல்லூரில் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்துக் கதிரேசன் கோவிலில் ஒன்று இருக்கின்றது. திருவாசியும் திருவடிவங்களும் யாழ்ப்பாணத்தில் இக்காலத்தில் செய்யப் பட்டன.

மரச்சித்திரவேலை.

யாழ்ப்பாணத்துக் கதிரேசன் கோவிலில் காணப்பட்ட மரச் சித்திரம் இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன் செய்யப் பட்டது.

சைவ சிற்ப ஆலயங்களும் வடிவங்களும் பௌத்த ஆலயங்களும் சைவத் திருவுருவங்களும்.

இலங்கை மக்களுள் பெரும் பகுதியினர் பௌத்த சமயத்தவர்கள். இலங்கை நாடே பௌத்த சமயப்பிரிவுகளுள் ஒன்றுன ஈயானத்திற்கு நிலைக்களனுக இன்று விளங்குகின்றது. இந்த நாட்டிலுள்ள தாது கோபங்களையும், புத்தரது வடிவங்களையும் போன்ற வடிவங்கள் எந்நாட்டிலுமில்லை. பௌத்த சமயத்துக்குரிய உயர்ந்த பண்புகளை இலங்கையில் இன்றும் காணலாம். இலங்கையில் பௌத்த சமயத்துக்கு அடுத்த படியில் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ள சமயம் சைவ சமயமேயாகும். சைவத்திருவுருவங்கள் பௌத்த விகாரையில் காணப்படுகின்றன. கணேசர், விஷ்ணு, கதிர்காம வேலவர் முதலியோரைப் பௌத்த மக்கள் வணங்கின ர். கதிர்காம வேலவர் வழிபாடு பௌத்த மக்களிடையே மிகப் பண்டைக் காலம் தொடக்கம் இருந்து வருகின்றது.

இலங்கையில் சைவத்தின் தொன்மை.

பழந்தமிழ் நாட்டில் மாயோனையும், முருகனையும் மக்கள் வணங்கி வந்தார்கள். மலைநாடுகளில் முருக வழிபாடு வழக்கிலிருந்தது. தென்னிலங்கையிலுள்ள கதிரமலையில் முருக வழிபாடு காணப்படுவது தமிழ் நாட்டு வழக்கத்திற்குப் பொருந்தியதொன்றுகும். துட்டகைமுனு காலத்திலிருந்தே கதிரமலை ஆலயம் மக்கள் வழிபடும் நிலையமாக சரித்திர வாயிலாக அறியப்படும். தென்னிலங்கையில் தமிழ் பண்பும் முருக வழிபாடும் மிகப் பண்டைக் காலத்தில் சிறப்

சிறப்புற்று விளங்கின.

யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலின் ஆசிரியராகிய மயில் வாகனப் புலவர், விஜயன் இலங்கைக்கு வந்தவுடன், வடக்கில் (கீரிமலைக்கு அருகில்) திருத்தம்பலேஸ்வரன் கோவிலையும், கிழக்கில் திருக்கோணேசர் கோவிலையும் தெற்கில் (மாத்தறையில்) சந்திர சேகரர் கோவிலையும், மேற்கில் திருக்கேதீஸ்வரர் கோவிலையும் கட்டுவித்தான் என ஒரு கர்ணபரம்பரைக் கதையைத் தமது நூலிலே கூறியிருக்கின்றார். தேவ நம்பியதீசன் காலத்தில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் வசித்தார்கள் என்பது தெளிவு. இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வெள்ளரசம் கிளைகள், வட துறைகளிலொன்றாகிய சம்புகோளம் அல்லது சம்பல்துறையில் இறக்கப் பட்டதெனக் கூறப்பட்டுள்ளது.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலிருந்து சமந்த கூடமெனக் கூறப்பட்ட சிவனொளிபாத மலைக்கு வந்து சென்ற பௌத்தர்கள், நாகதீபமாகிய யாழ்ப்பாணப் பகுதிக்கூடாகச் சென்றனர் என்பதை "மணிமேகலை" என்னும் நூலில் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், புத்தர் காலத்தில் நாகர்கள் வசித்தார்களென மகாவம்சம் கூறுகின்றது. களனியாவில் புத்தர் காலத்தில் மாணியக்கி என்ற அரசன், இந்து சமயத்திலிருந்து பௌத்த சமயத்திற்கு மாற்றப்பட்டது களனியபவோடு தொடர்புடைய பழங்கதைகளில் ஒன்றாகும். நாகர்கள் சிவ வழிபாட்டை மேற்கொள்வோர் என்பது இதிகாச புராணங்களால் அறியப்படும் உண்மையாகும். எனவே வட இலங்கையிலும், தென் மேற்கு இலங்கையிலுமிருந்த மக்கள் புத்தர் காலத்திற் சைவ சமயத் தொடர்புடையோராகவே இருந்தார்கள் என்பது பொருத்தமுடைய முடிபாகும். திருக்கோணேசர் ஆலயத்திற்கும், திருக்கேதீஸ்வரர் ஆலயத்திற்கும் தேவாரப் பாடல்கள் இருப்பதனால், அவ்வாலயங்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முந்தியவையாக வேண்டும். அவ்வாலயங்கள் முற்காலத்தில் பலவிதமான சிற்பச் சிறப்புகள் பொருந்தியவையாக விளங்கியமை சரித்திர வாயிலாக அறிய முடிகின்றது.

சைவ ஆலயங்கள்.

இலங்கையிற் சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படும் சைவ ஆலயங்கள், பொலநறுவை வானவன் மாதேவி ஈசுவரமுடையோர் ஆலயம் ( சிவதேவாலயம் 2), மட்டக்களப்புப் பகுதியிலுள்ள திருக்கோவில் முருகன் ஆலயம் என்பனவாகும். திருக்கோவில் ஆலயம் பிற்காலப் பாண்டியர் அல்லது சோழர் சிற்ப முறையைப் பின்பற்றியதாகக் காணப்படுகின்றது. கோணேசர் ஆலயத்திற்கு இராவணன் தொடர்புடைய கதைகள் திருக்கோவில் சிவாலயத்திற்கும் கூறப்படுகின்றன.

சைவ ஆலயங்களின் காலமும் வரலாறும்.

திருக்கேதீஸ்வரர் ஆலயம் முதலாம் இராசராஜன் காலத்தில் அழகு பெறக் கட்டப்பட்டது. திருக்கோணேசர் ஆலயம் கருங்கற்களால், குளக் கோட்டன் அரசனால் கட்டப்பட்டது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து ஜடவர்மன் வீரபாண்டியன் என்பவன் இலங்கை அரசன் ஒருவனை வென்று கொண்டு திருகோணமலையில் தனது மீன் கொடியின் அடையாளத்தினைப் பொறித்தான். திருகோணமலைக் கோட்டை வாசலில் இருமருங்கிலுமுள்ள கற்களில் அச்சித்திரங்கள் இன்றும் காணப்படுகின்றன. கோணேசர் ஆலயத்தை இடித்து எடுத்த கற்களாலேயே திருகோணமலைக் கோட்டை கட்டப்பட்டது. ஜடவர்மன் வீரபாண்டியன் காலத்திலே கோணேசர் ஆலயம் சிறப்புடன் விளங்கியிருத்தல் வேண்டும்.

பொலநறுவை முதலாம் சிவாலயம், இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் அல்லது சொற்ப காலத்துக்கு முன் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வரசன் பாண்டியருடன் நல்லுறவு பூண்டு, பாண்டிய நாடு சென்று, அவர்களிடமிருந்து புத்த தந்தத்தைப் பெற்று வந்து பொலநறுவையிலிருந்து ஆண்டானெனச் சரித்திரம் கூறுகின்றது. முதலாம் சிவாலயத்திற்கு புத்த தந்த ஆலயம் எனவும் பெயருண்டு. இரண்டாம் பராக்கிரம பாகுவின் காலத்தில் புத்த தந்தத்திற்கும் சிவாலயத்திற்கும் தொடர்பு

ஏற்பட்டிருத்தல் கூடும். பொலநறுவையிலுள்ள 2ஆம் சிவாலயமே இலங்கையிலுள்ள மிகப் பழைய சோழர் காலத்துக் கட்டிடமாகும். அவ்வாலயம் இராஜராஜ மன்னனின் மனைவியாரின் பெயரையுடையதாக விளங்கியது. அவ்வம்மையாராகிய வானவன் மாதேவியாரது மகனே இராஜேந்திர சோழ ஆவான். சோழர் தலைநகராகிய தஞ்சை மாநகரில் கட்டப்பட்ட சிவாலயம் இராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது. இலங்கையின் தலை நகரமான ஜனநாதபுரத்தில் இராஜேந்திரனால் முற்றுவிக்கப்பட்ட சிவாலயம், அவனது தாயின் பெயரால் அழைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் இராஜராஜேஸ்வரம், பிற்காலத்திலெழுந்த கோவில்களுக்கெல்லாம் முன் மாதிரியான சிற்ப நிலையமாக விளங்கிற்று. அவ்விதமே பொலநறுவையிலுள்ள வானவன் மாதேவி ஈசுவரமுடையார் ஆலயம், பிற்காலத்திற் பொலநறுவையிலெழுந்த பௌத்த சைவ சிற்ப ஆலயங்களுக்கெல்லாம் வழி காட்டியாக அமைந்து விளங்கியது. ஜனநாத மங்கல வானவன் மாதேவி ஈசுவரமுடையார் என்பது அங்கு கோவில் கொண்டெழுந்தருளிய மூர்த்தியின் பெயர். பொலநறுவை சோழர் காலத்தில் "புலைநரியான ஜனநாதபுரம்" என்றும் வழங்கப்பட்டது. புலஸ்திய நகர் என்ற பூர்வீகப் பெயரே, 'புலை நகரி என்று பிற்காலத்தில் வழங்கப்பட்டது.

" நிகரிலி சோழவள நாட்டுப் புலநரியான
ஜனநாதபுரம்"

எனப்பட்டதும் பொலநறுவையேயாகும். 2ஆம் சிவாலயம் கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்த மண்டபம், விமானம், முதலிய அங்கங்களுடன் விளங்கிய. மகா மண்டபம் அழிந்து விட்டது. அதன் அத்திவாரம் காணப்படுகின்றன. பிரகாரச் சுவர்களின் மேலிருந்த கல் நந்திகள் உடைந்து கிடக்கின்றன. ஆலயத்திலுள்ள சிவலிங்கத்திருவுருவம் பழுதடையாதிருக்கின்றது. அர்த்த மண்டபத்திலுள்ள மேற்பாகு கல்லுகள் சில உடைந்து விட்டன. அதிஷ்டானத்துக்குக் கீழுள்ள உபபீடம் மண்ணுள் மறைந்து விட்டது.

கர்ப்பக்கிரகத்தின் வெளிப்புறம் 20 அடிச் சதுரம், உட்புறம் 9 3/4 அடிச் சதுரம், அர்த்த மண்டபத்தின் வெளிப்புறம் 15 அடி 5 அங்குல நீளமும், 9 அடி 4 அங்

131553

குல அகலமும் உடையது. விமானம் இரண்டு தளங்களையுடையது. முதற் தளத்தின் நான்கு மூலைகளிலும் கர்ண கூடுகளும், நடுவில் சாலைகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. கர்ண கூடுகளிலும், சாலைகளிலும் கூரைகள் பல்லவர் காலத்துக் கூரைகளையொத்தவை. சோழர் காலத்துச் சிற்ப முறை பல்லவர் காலத்துச் சிற்ப முறையைப் பின் பற்றி எழுந்ததென்பது, பொலநறுவை வானவன் மாதேவி ஈச்சரமுடையார் ஆலயத்தையும் மாமல்லபுரத்துக் கல் இரதங்களையும் ஒப்பு நோக்குவோர்க்கு நன்கு புலனாகும். முதலாம் சிவாலயத்தின் சுவர்கள் மாத்திரம் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. கர்ப்பக்கிரகத்தின் விமானம் செங்கற்களால் கட்டப்பட்டதாதலால் முற்றும் அழிந்து விட்டது. கர்ப்பக்கிரகத்திலும், அர்த்த மண்டபத்திலும் மேற்பகுதிகள் காணப்படுகின்றன. மகா மண்டபத்தின் மேற்பகுதிகள் முற்றும் அழிந்து விட்டன. மகா மண்டபத்தின் வடக்குப் பகுதியில் தேவியின் சிலையொன்று உடைந்து கிடக்கின்றது. கர்ப்பக் கிரகத்தின் தெற்குப் பக்கத்தில் தட்சிணாமூர்த்தியின் சிலையின் அடிப்பகுதி காணப்படுகின்றது. அர்த்த மண்டபத்தின் வாசலின் இரு பக்கங்களிலும் துவார பாலகர்களின் வடிவங்கள், மேற்பகுதி உடைந்த நிலையிற் காணப்படுகின்றன. சிவலிங்கம் உடைந்து கிடக்கின்றது.

பொலநறுவை சிவாலயங்களுள் காணப்படும் சிவலிங்கங்களின் பீடங்கள் சதுர வடிவாகக் காணப்படுகின்றன. முதலாம் சிவாலயத்திற்கு அரைக்கல் தூரத்திற்கு ஒரு சிவாலயமும், விஷ்ணு ஆலயமும் காணப்படுகின்றன. விஷ்ணு ஆலயத்தில் மூர்த்தியின் வடிவம் காணப்படுகின்றது. சிவாலயத்தில் இலிங்கத்தின் பீடம் சதுரமாகவே இருக்கின்றது.

1ஆம் சிவாலயத்தின் சிற்ப வேலைப்பாடுகள், 2ஆம் சிவாலயத்தின் சிற்ப வேலைப்பாடுகளிலும் சிறந்தனவாக இருக்கின்றன. சிற்ப அடுக்குகள் விரிவாயும், நுண்ணிய வேலைப்பாடுகள் உடையனவாகவும் உள்ளன. வெளிப்புறச்சுவர்களில் உள்ள ஸ்தம்பங்கள் சோழருக்குப் பின் தோன்றியனவற்றையொத்தன. மகா மண்டபத்தின் தெற்கு வாயிலுக்கு முன் பாகமும் தட்சிணா மூர்த்திக்கு முன்பாகவும் கருங்கற்களால் அமைந்த மேடைகள் காணப்படுகின்றன.

மௌரிய சிற்ப முறை.

அநுராதபுரக் காலம் தேவநம்பியதீசன் காலம் தொடங்கி 9 ஆம் நூற்றாண்டின் இறுதியோடு முடிவடைகின்றது. தீசன் மிகுந்தலையில் ஒரு விகாரத்தையும், அநுராதபுரத்தில் தூபராம தாதுகோபத்தையும் கட்டுவித்தான். தூபராமதாதுகோபம், தீசன் கட்டிய தாதுகோபம் அழிந்த பின்பு கட்டப்பட்டதாகும். மகியங்கனைத் தாதுகோபமும் அவனால் கட்டப்பட்டது. ஈசுரமுனி விகாரையும் வெசகிரி விகாரையும் இவன் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக் கோவில்களாகும். துட்டகைமுனு (கி.மு. 107-77) ருவன்வெலிசாயா என்னும் தாதுகோபத்தையும், லோகமகாபாயா என்னும் உபோசாதா மாளிகை (விரத இல்லம்) யையும் கட்டுவித்தான். ருவான்வெலிசாயா தாதுகோபம் இந்தியாவிலுள்ள சாஞ்சித் தாதுகோபங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. துட்டகைமுனு ருவான்வெலிசாயாவில் அடக்கஞ் செய்வதற்கு வேண்டியனவாக அஸ்திச் சின்னங்களை, ஆந்திர நாட்டிலிருந்து தருவித்தானென்று கூறப்படுகின்றது. மிருசவதி தாதுகோபமும் துட்டகைமுனுவால் கட்டப்பட்டது. வத்தகாமணி, அபயன் காலத்தில் ( கி.மு. 43) அபயகிரி தாதுகோபமும் இலங்காராமதூபமும், எல்லாளனின் சமாதியெனக் கருதப்பட்ட தக்கிண தூபமும் கட்டப்பட்டன. 1ஆம் பாதிகாயன் மகாதூபம் என்ற ருவான்வெலிசாயாவுக்குச் சில சிற்ப அலங்காரங்களைச் செய்வித்தான். அவன் சகோதரனான மகாநாட்டிக மகாநாதன் மிகுந்தலை மலை உச்சியில் ஒரு தாதுகோபத்தைக் கட்டுவித்தான். கயவாகு (கி.பி. 173-195) அபயகிரி தாதுகோபத்தைப் பெருப்பித்துச் சில அலங்காரங்களைச் செய்வித்தான். கனிட்டதீசன் (கி.பி. 226- 244) அபயகிரிக்கு வாசல் கடவைகளைக் கட்டினன். சேதவனராமா தாதுகோபம் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் மகாசேனனால் கட்டப்பட்டது. இதுவே புத்த உலகத்தில் மிகப் பெரிய தாதுகோபமாகும். 1934 ஆம் ஆண்டு காணப்பட்ட மிகுந்தலை கந்தசையித்திய தாதுகோபம் இலங்கையிலுள்ள மிகப் பழைய தாதுகோபங்களில் ஒன்றாகும். இத்தாதுகோபத்தைக் கட்டியவர்கள் யாரென்பது அறியக் கூடியதாக

இலே. கி.மு. 59-50 ஆண்டளவில் இருந்த வஞ்சதீசன் இந்நாக கோபத்தைப் பெருப்பித்துச் சில திருத்தங்களைச் செய்தானென மகாவம்சம் கூறுகின்றது. கந்தகசைத்தியத்தில் காணப்படும் வாசல் கடவைகள் மிகச் சிறந்த சிற்ப நுட்பங்கள் பொருந்தியன. கிழக்குப் பக்கத்து வாசல் கடவையின் விமானமும் சித்திரங்களும் சிதைவுறாது நல்ல நிலையில் இருக்கின்றன.

சைவத் திருவடிவங்கள்.

கொழும்பு நூதன பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கும் சைவத் திருவடிவங்களிற் சில, முதலாம் சிவாலயத்தில் வைக்கப்பட்டிருந்தவையாகும். எனவே, அவ்வடிவங்கள் சோழ சிற்ப முறையைப் பின்பற்றி 13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளின் முற்பகுதியிலும் பின்பும் செய்யப்பட்டவையாதல் வேண்டும். பொலநறுவையிலுள்ள 5 ஆம் சிவாலயத்திலும் பல திருவடிவங்கள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட திருவடிவங்கள், கலைவளப்பிலும், சிற்ப அமைப்பிலும் 1ஆம் தேவாலயத்தில் எடுக்கப்பட்டனவற்றிலும் சிறந்தவையாகக் காணப்பட்டன. 5ஆம் சிவாலயத்தில் எடுக்கப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், சண்டேஸ்வர நாயனார், முதலியோரின் வடிவங்களைப்போன்ற சிறந்த சிற்ப வடிவங்கள் தென்னிந்தியாவிலும் கிடைப்பது அரிதாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவடிவம், உலகத்திலேயே சிறந்த சிற்ப வடிவங்களில் ஒன்று என்பது கலைப்புலவர்களின் கருத்து. அவ்வாலயத்திலெடுக்கப்பட்ட சிவமூர்த்தமும் சிறந்த சிற்பங்களுள் ஒன்று.

திருகோணமலைத் திருவடிவங்கள்.

இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன் திருகோணமலையிற் சில சைவத் திருவடிவங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை சிறந்த சிற்ப அழகும், கலை வளப்பும் பொருந்தியவையாகக் காணப்படுகின்றன. 1950ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டன. சோமாஸ்கந்த வடிவமும் பார்வதியின் வடிவமும், சந்திர

சேகரர் வடிவமும் மிகவும் அழகு வாய்ந்தன. சந்திர சேகரர் வடிவம் மிகவும் பழமையானது போற் காணப்படுகின்றது. மற்றைய இரண்டும் பாண்டியர் காலத்து வடிவங்களைப் போன்றனவாகக் காணப்படுகின்றன. திருக்கோணேசர் ஆலயம் 1624ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற் சைவ ஆலயங்கள்.

யாழ்ப்பாணக்குடாநாடு பண்டைக்காலத்தில் நாகதீபம் என இலங்கைச் சரித்திரத்தில் வழங்கப் பட்டு வந்ததென்பதும், புத்தர் காலத்திலும் அதற்கு முன்பும், மக்கள் அங்கு வசித்தார்கள் என்பதும் இலங்கை வரலாற்று நூல்களில் அறியக்கிடக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு கதிரைமலை, சிங்கை நகர், நல்லூர் என்னும் நகரங்கள் முறையே இராசதானிகளாகக் காலத்திற்குக் காலம் விளங்கினவென யாழ்ப்பாணச் சரித்திரம் கூறும். நாகர்களது ஆதிக்கம் சிறந்து விளங்கிய காலத்தில் கதிரைமலை (கந்தரோடை) தலை நகரமாக விளங்கியது. கதிரைமலையில் தேவநம்பியதீசன் காலத்திற்குப்பின் பௌத்த சமயம் பரவியிருந்ததென்பதற்கு அங்கு காணப்பட்ட வெத்த ஸ்தூப வடிவங்களும், வேறு பொருட்களும் தக்க சான்றுகளாகும். தேவநம்பியதீசன், நாகதீபத்தில் சம்புகோள விகாரையையும், திஸ்ஸ மகா விகாரையையும், பாசின விகாரையையும் கட்டியமை கூறப்பட்டுள்ளது.

எட்டாம் நூற்றாண்டில் கலிங்க தேசத்து அரசனாகிய உக்கிரசிங்கன் கதிரைமலையைக்கவர்ந்து, நாகதீபத்திற்கு அரசனாகினான். மாருதப்புரவீகவல்லி என்னும் சோழ இராசகுமாரியை மணந்து அவளின் விருப்பத்திற்கிணங்கி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தவன். இவ்வரசன் சிறிது காலத்திற்குப்பின், பருத்தித்துறைக்கு அணித்தாயுள்ள வல்லிபுரம் என்னும் இடத்தில் ஒரு நகரை அமைத்து அதற்கு சிங்கை நகர் என்னும் பெயரிட்டு அங்கிருந்து நாட்டை ஆண்டு வந்தான். 12ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோழ நாட்டை ஆண்ட 1ஆம் குலோத்துங்கன் தன் சேனாதிபதியாகிய

கருணாகரத் தொண்டமானை அனுப்பி இலங்கையை வென்ற நிகழ்ச்சி அவனது சாசனங்களிலும், கலிங்கத்துப் பரணியிலும் கூறப்பட்டுள்ளது. கருணாகரன் தொண்டமானாற்றையும் வெட்டுவித்து, உரும்பராயிலிருக்கும் கருணாகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டுவித்தான். கி.பி. 1410 ஆம் ஆண்டில் அரசனாகிய குணவீரசிங்க ஆரியன் எனப்படும் பரராச சேகரனே சிங்கை நகரிற் கடைசியாகச் சிறப்புடன் அரசு செலுத்திய மன்னனாவான். இராமேஸ்வரக் கர்ப்பக்கிருகத்தைத் திருகோணமலைக் கற்களைக் கொண்டு கி.பி. 1414ஆம் ஆண்டிற் கட்டுவித்த அரசனும் இவனே. பரராசசேகரன் மகன் கனக சூரிய சிங்க ஆரியன் ஆட்சிக் காலத்தில் (1450) கோட்டை அரசனாகிய ஆறும் பராக்கிரம பாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு தன் சேனைத் தலைவனான செண்பகப் பெருமாள் என்பவனை அனுப்பினன். செண்பகப் பெருமாள் நகரை அழித்து அரசனையும் வென்று கொண்டான்.

பராக்கிரம பாகுவின் அனுமதியோடு செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்திற்கு அரசனானன். சிங்கை நகர் பாழாகி விட்டதனால், நல்லூரை இராசதானியாக்கி ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்னும் பெயருடன் செண்பகப் பெருமாள் 17 வருடங்கள் ஆண்டு வந்தான். இவனே நல்லூர் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தவன். கோட்டை அரசனாகிய ஆறும் பராக்கிரம பாகு இறந்த பின் இவன் அங்கு சென்று ஆறும் புவனேகபாகு என்னும் பெயருடன் அரசனாகவிருந்து, யாழ்ப்பாணத்திற்கு விஜயபாகு என்பவனை அரசனாக நியமித்தான்.

விஜயபாகுவின் காலத்தில் கனகசூரியன் தென்னிந்தியாவிலிருந்து சேனையுடன் வந்து, விஜயபாகுவை வென்று நல்லூருக்கு அரசனானன். கனகசூரியனுக்குப்பின் அவன் குமாரன் சிங்கைப் பரராசசேகரன் கி.பி. 1478 இல் அரசனானன். நல்லூரைச் சைவ ஆலயங்களும் மாட மாளிகைகளும் நிறைந்த நகரமாக்கியவன். இவ்வரசன் நகருக்கு வட பாலில் சட்டநாதர் ஆலயமும் கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயத்தையும், தென் பாலில் கைலாசநாதர் கோவிலையும், மேற்கில் வீரமாகாளி அம்மன் திருப்பதியையும் அழகு பெறக் கட்டுவித்தான். கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் ஒரு திருக்குளம்

அமைத்து அதற்கு யமுனாரி என்னும் பெயரிட்டான். இக்குளம் இன்றும் நல்லூரிற் காணப்படுகின்றது.

சிங்கைப் பரராச சேகரனால் கட்டப்பட்ட இப்பெரிய ஆலயங்கள் யாவும் போர்த்துக்கேயரால் தரைமட்டமாக்கப் பட்டதினால், அவ்வாலயங்கள் எத்தகைய சிற்பச் சிறப்புகள் பொருந்தியனவாக அமைக்கப்பட்டனவென்பதை நாம் இன்னும் அறியமுடியாதிருக்கின்றோம்.

உக்கிரசிங்கனால் 8ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் செண்பகப் பெருமாள் என்னும் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவாற் கட்டப்பட்ட நல்லூர் கந்தசுவாமி கோவிலும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டன. மேலே காணப்படும் ஆலயங்கள் 1793 ஆம் ஆண்டிற்குப்பின்னும், ஆங்கிலேயர் அரசாட்சிக் காலத்திலும் கட்டப்பட்டனவேயாகும். யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களை இடித்து எடுத்த கற்களைக் கொண்டே யாழ்ப்பாணத்துக் கோட்டையைப் போர்த்துக்கேயர் கட்டினார்கள். என்பதற்கு, அக் கோட்டையின் அத்திவாரத்திற் காணப்படும் தாமரைப்பூச் சித்திரம் செதுக்கப்பட்ட வாயிற் படிக்கல்லே அழியாச் சான்றாகும்.

நல்லூரில் இருக்கும் சட்டநாதர் ஆலயத்தின் திருக்குளத்தை வெட்டியபொழுது, சில திருவடிவங்கள் மண்ணுள் கிடந்து எடுக்கப்பட்டன. அவை உமாதேவி, தட்சிணா மூர்த்தி, கஜலட்சுமி, வள்ளி தெய்வானை சமேத மயில் வாகனர், சனீஸ்வரர் என்பனவாகும். உமாதேவியின் திருவடிவம் கோவிலில் இன்றும் இருக்கின்றது. மற்றைய வடிவங்கள் யாழ்ப்பாணத்து நூதன பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டிருக்கின்றன. இத்திருவுருவங்கள் சிங்கைப் பரராசசேகரன் காலத்தனவையாதல் வேண்டும். நல்லூர், யாழ்ப்பாணத்து இராசதானியாக விளங்கிய காலத்தில், தமிழ் நாட்டில் சிறப்பெய்திய சிற்பமுறை விஜய நகர சிற்ப முறையேயாகும். எனவே, சட்டநாதர் ஆலயத்தில் காணப்பட்ட திருவடிவங்களும் இம்முறையைச் சேர்ந்தனவாகவே இருத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாடு மிகப் பண்டைக் காலம் தொடக்கம் சைவ சமயத்திற்கு நிலைக்களமாக விளங்கிய போதிலும், அக்காலத்துக் கலைச் சிறப்புக்களை நாம் அறியக் கூடிய வகையில் எமக்கு போதிய சான்றுகள் இன்று அகப்படவில்லை. வல்லிபுரத்திலும் கந்தரோடையிலும், நாகர் கோவிலிலும், நல்லூரிலும் ஏனைய பகுதிகளிலும் புதை பொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் சிரத்தையோடு ஆராய்ச்சி நடத்துவார்களெனில் பண்டைய காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த ஆலயங்களின் சிற்பப் பொருளும் வேறு பல பொருள்களும் அகப்படக் கூடும். இவ்வழியில் அரசினரும் கலா விருத்தி நிலையங்களும் கருத்துச் செலுத்தல் மிகவும் விரும்பத்தக்க செயலாகும்.

5664

. . . . . . . . . . . .

நூலுருவாக்கம் - அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை. தொடர்புகள்: என். செல்வராஜா, நூலகர், இவ்லின் இரத்தினம் நிறுவனம், பல்கலைக் கழக ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தாதுகோப அமைப்பு முறை.

தாதுகோபமானது மூன்று அங்கங்களையுடையது.

1. அடித்தளம், 2. அண்டம், 3. தூபி என்பனவே அவையாகும்.

அடித்தளத்தில் முதலாம் சுற்றுப்பிரகாரம் அமைந்திருக்கும். அப்பிரகாரத்தினைச் சுற்றிக் கட்டப்பட்ட சுவர், வேதிகை எனப்படும். வேதிகைக்கு வெளியேயுள்ள வெளியை இரண்டாம் சுற்றுப் பிரகாரம் எனலாம். அப்பிரகாரத்தைச் சுற்றியும் வேதிகை அமைக்கப் படுதல் வழக்கம். அடித்தளத்தில் வேலைப் பாடமைந்த மூன்று அலங்கார வரிசைகள் ஒன்றின் மேலொன்றாக அமைக்கப்பட்டிருக்கும். கீழ் வரிசை பிரதஉறன் பாதையாகவும், மேலிரண்டும் புஷ்ப பீடமாகவும் உபயோகிக்கப் படுகின்றன. அடித்தளத்தைச் சுற்றி வேதிகையிருந்தமையால், கீழ் அடித்தளம் சுற்று வீதியாக உபயோகிக்கப்பட்டதென்றே கொள்ளல் வேண்டும். மேல் வரிசைகளில் புஸ்பங்கள் வைக்கப் பட்டமையால் அவை புஸ்ப தானங்கள் என அழைக்கப்பட்டு வந்தன. அடித்தளத்தின் மேல் அண்டம் அமைக்கப் படும். அண்டம் ஒரு முட்டையின் மேற் பகுதியின் வடிவில் அமைக்கப் படுகின்றது. அண்டத்தின் புறப் பகுதி முழுவதும் செங்கற்களால் கட்டப் பெற்றுச் சுண்ணம்பால் பூசப் பெற்றுள்ளது.

அண்டத்தின் மேல் தூபி அமைக்கப்படும். தூபி 5 அம்சங்களையுடையதாகக் கட்டப் படுகின்றது. அண்டத்தின் மேல் உள்ள பகுதி உறதரஸ் கொட்டுவ அல்லது சதுரக் கோட்டம் எனப்படும். அப்பீடத்தின் மேலுள்ள பகுதி தேவதா கொட்டுவ எனப்படும். கோட்டத்தின் மேல் சந்த அல்லது குடை அமைக்கப்படும். அதன் மேல் சிகரம் அமைக்கப் படும். சிகரம் "கறல்வ" என்றழைக்கப்படும்.

அநுராதபுரம், பொலந்நறுவை, மிருந்தலை முதலிய இடங்களிலுள்ள தாது கோபங்களில் வேதிகைகள் காணப்படவில்லை. மண்டலகிரி (மதிரகிரிய) என்னுமிடத்திலுள்ள தாது

கோபமொன்றில் மாத்திரம் வேதிகை காணப் படுகிறது. அவ்வேதிகை சாஞ்சித் தாதுகோபத்திலுள்ள வேதிகையைப் போன்ற சிற்பவமைப்புப் பொருந்தியதாகக் காணப் படுகின்றது.

சாஞ்சித் தாதுகோபத்தில் மூன்று வேதிகைகள் காணப் படுகின்றன. தூபியைச் சுற்றியும் ஒரு வேதிகையிருக்கின்றது. ருவான் வெலி சாயா தாது கோபத்திலே ஆதி காலத்திலே இரண்டு வேதிகைகள் இருந்தன என மகாவம்சம் கூறுகின்றது. ஹதரஸ் கொட்டுவவைச் சுற்றியமைக்கப் படும் வேதிகை முத்த வேதிகையென்றும், அடித்தளத்தைச் சுற்றியுள்ள வேதிகை குச்சவேதிகையென்றும் அழைக்கப்பட்டன.

## வாகல் கடங்கள்.

சாஞ்சித் தாது கோபத்தின் அடிப்பாகத்திலுள்ள சுற்று வீதியின் நான்கு வாசல்களிலும் அலங்கார வேலைப்பாடமைந்த தோரணங்கள் காணப்படுகின்றன. அத்தோரணங்களிற் காணப்படும் சித்திரங்கள் மிக்க கலைவனப்பு வாய்ந்தனவென்பது கலைப்புலவர்களது முடிபு. இலங்கையிலுள்ள தாதுகோபங்களின் வாசல்களிலும் மரத்தினால் செய்யப்பட்ட சித்திர வேலைப்பாடமைந்த தோரணங்கள் இருந்தனவாகக் கருதப் படுகின்றது.

சாஞ்சித் தாதுகோபத்திற் காணப்படும் சித்திர வேலைப்பாடமைந்த தோரணங்களுக்குப் பதிலாக இலங்கையிலுள்ள தாது கோபங்களின் நான்கு திக்குகளிலும் நான்கு விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை வாகல்கடங்கள் என அழைக்கப்பட்டன. வாகல் கடங்கள் இலங்கையில் மாத்திரமே காணப் படுகின்றன. அவற்றையமைக்கும் வழக்கம் இலங்கையில் எப்போது தோன்றியதென்பது அறியக்கூடியதாகவில்லை. அநுராதபுரத்திலுள்ள மிரிசுவேதி தாதுகோபத்திலும், மிகிந்தலையிலுள்ள கந்தக சைத்திய எனப்படும் தாது கோபத்திலும் மிகப்பழைய வாகல்கடங்கள் காணப்படுகின்றன.

வாகல் கடங்களின் கீழ்ப்பகுதிகள் முழுவதும் கற்களாலும் மேற்பகுதிகளாகிய விமானங்கள் செங்கற்களாலும் அமைக்கப் பட்டிருக்கும். இன்று காணப்படும் வாகல் கடங்களின் மேலுள்ள விமானங்கள் அழிந்து விட்டன. சித்திர வேலைப்பாடமைந்த நீள் சதுரமான உயர்ந்த கற்கள் (தூண் போன்றவை) வாகல் கடங்களின் இரு பக்கங்களிலும் வைக்கப் பட்டிருக்கும். நாகராச வடிவங்கள், பூக்களமைந்த கொடிகள், தாமரை மலர்கள், பூரண கும்பங்கள் முதலியன இக்கற்களில் செதுக்கப் படுவன. இக்கற்களின் சித்திர வேலை சாஞ்சித் தோரணங்களிற் காணப்படும் தூண்களை நினைவூட்டுகின்றன. விமானத்திற்குக் கீழுள்ள பகுதியில் முற்பக்கத்திலிருக்கும் சிற்பவரிசைகளிற் சித்திரங்கள் காணப் படுகின்றன. முதலாம் சுற்று வீதிக்குப் போவதற்குப் படிகள் வாகல் கடங்களுக்குப் பின்னால் அமைக்கப் பட்டிருக்கும்.

வாயில்கள்.

வாகல் கடங்களின் முன்னுள்ள இரண்டாம் சுற்று வீதி மேடைக்கு ஏறி வருவதற்குப் படிக்கட்டுகளையுடைய வாயில்களுள்ளன. அவ்வாயில்கள் நான்கு அங்கங்களையுடையன.

1. சந்திரவட்டப் படிக் கல்லு
2. சித்திரங்கள் அமைந்த படிகள்
3. துவாரபாலகர்கள் (இரண்டு)
4. கைப்பிடி வரிசைகள் (இரண்டு)

கீழ்ப்படிக்கு முன்னால் தாமரைப்பூவை நடுவிலும், அதனைச் சுற்றி யானை, யாளி, எருது, சிங்கம், அன்னம், பூங்கொடி முதலிய சித்திரங்களைக் கொண்ட சந்திர வட்டக்கல் வைக்கப் படுதல் வழக்கம். பௌத்த சமய நிலைகளிலெல்லாம் அதன் முன்னுள்ள வாயில்களில் சந்திரவட்டப் படிக்கல்லை வைப்பது இலங்கையிற் காணப்படும் விசேஷட அம்சங்களிலொன்றாகும்.

உயரத்திற்குத் தக்க விதமாகப் படிகளின் தொகைகளிருக்கும். ஒவ்வொரு படியிலும், குட்டையான நகைச்சுவை பொருந்திய மனித வடிவங்கள் அல்லது மிருகங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

சந்திர வட்டப்படிக் கல்லின் இரு பக்கங்களிலும் கைப்பிடி வரிசைக்கு முன்பாக இரு துவார பாலகர்கள் அல்லது பூரண கும்பங்கள் செதுக்கப்பட்ட இரு கற்கள் அமைக்கப் பெற்றிருக்கும். சில கற்களில் குட்டையான மனித வடிவங்கள் காணப்படும். பெரும்பாலான கற்களில் நாகராச துவார பாலக வடிவங்களே அமைக்கப் பட்டிருக்கும். படிகளின் இரு மருங்கிலும், கை பிடித்தேறுவதற்காக யாளி யானை முதலிய மிருகங்களின் தலைகளுடைய சித்திரக் கைப் பிடி வரிசைகள் அமைக்கப் படும். சாதாரண மட்டமான கைப்பிடி வரிசைகள் அநுராதபுரம், மிகிந்தலை முதலிய இடங்களிற் காணப் படுகின்றன. தாது கோப வீதியில் அல்லது அதற்குச் சமீபத்தில் புத்தரது அவரது சீடர்களது மான திருவடிவங்கள் வைக்கப் பட்ட விகாரைகளுண்டு. அவை பிறிமகே என அழைக்கப்படும். தாது கோபத்தைச் சுற்றியுள்ள கோட்டங்களிற் சங்கிராமம் அமைந்திருக்கும். பௌத்த சன்நியாசிகள் வசிக்கும் இடம் சங்கிராமம். எனப்படும். ஒரு சங்கிராமத்தில் தாது கோபம், பிலிமகே, தர்மசாலை (பிரசங்க மண்டபம்) உபோசத மண்டபம் (விரத இல்லம்) முரகே ( காவல் இல்லம்) போதி கோட்டம் (வெள்ளரசு நிலையம்) பொக்குண (குளம்) முதலிய நிலையங்கள் அமைந்திருக்கும்.

அநுராதபுரத்தில் காணப்படும் தாது கோபங்களுக்கு அருகில் மேற்கூறப்பட்ட கட்டிடங்களின் அத்திவாரமும் அடித்தள வரிசைகளும் காணப் படுகின்றன. சில அடித்தளங்களின் மேல் கருங்கற்றூண்கள் காணப்படுகின்றன. தூண்களின் மேல் அமைக்கப் பட்ட பகுதிகள் அழிந்து போயின. தூண்களின் மேலுள்ள அமைப்புகள் ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்கு மாடங்களாகவிருந்தன வென்பது மகாவம்சம் முதலிய நூல்களால் அறியக் கிடக்கின்றது. அநுராதபுரத்திலிருக்கும் பித்தளை மாளிகை எனப்படும் விரத இல்லம் ஒன்பது மாடங்களையுடையதாகவும், 1000 அறைகளையுடையதாகவும் பித்தளைத் தகட்டினால் வேயப்பெற்றதாயும் இருந்தது. பண்டைக் காலத்தில் ஆலயங்களை உலோகத் தகட்டினால் வேயும் வழக்கம் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் இருந்தது. பொன்னம்பலம் எனப் பெயர் கொண்ட சிதம்பரம் நடராசர் மண்டபம்


பொன் தகட்டினால் வேயப்பட்டதென்று சரித்திரங்களில் கூறப்பட்டுள்ளது. நடராசர் மண்டபத்தின் அடித்தளமும் தூண்களும் கருங்கற்களால் அமைக்கப் பெற்றும் மேல் விமானம் மரத்தினால் அமைக்கப்பெற்றும் இருந்தவை நாம் இன்னும் காணலாம்.

பொலநறுவாவில் உள்ள இரங்கொத தாது கோபத்தின் அடித்தளத்திற் கருகிலும் கிரி விகாரைத் தாது கோபத்தின் அடித்தளத்திற் கருகிலுள்ள எட்டு மூலைகளிலும் எட்டு விக்கிரக மண்டபங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் புத்தரது திருவடிவம் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகின்றது.


தாது கோபங்கள் பலவித உருவங்களில் அமைக்கப்பட்டன, சில, மணி வடிவமுடையனவாகவும் சில முட்டை வடிவுடையனவாகவும் சில நெற்குவியல் வடிவுடையனவாகவும் உள்ளன. தூபராம தாதுகோபமும் மிகிந்தலை அம்பஸ்தல தாதுகோபமும் பிறவும் மணி வடிவம் உடையன. ருவன்வலி சாயா, அபயகிரி, இரங்கொத முதலிய தாது கோபங்கள் முட்டையின் பாதி வடிவமுடையனவாகவுள்ளன. நெற்குவியல் போன்றனவும் இலங்கையில் உண்டு. ஒட்டப்புவ களனி விகாரை தூபியின் சிகரம் தங்கத்தால் அல்லது வெள்ளியினால் அல்லது பளிங்கினால் செய்யப்பட்டிருக்கும்.

---

அலங்காரங்களும் அவற்றின் பெயர்களும்



அரும்பு (அரும்புவ)



அரும்பு



கல்பிந்து



புலாபெத்தி



பலாபெத்தி



சவடி



சவடி (சவ[illegible]யா)



குந்தரிக்கம்



சீப்புரு (ப[illegible]வ)



தனியிழை



ஈரிழை



தனிச்சுழி




இரட்டைச்சுழி



கேது



பூவும் மொட்டும்



அரசிலை (பாபதுஜ)



அரசிலை



வள்ளிக்கொடி ( லியவல )






வள்ளிக்கொடி




தாழம்பூ
(வற்றகே மல)




தீச்சுடர் (அக்தல்லை)



தாமரை அலங்காரம்
(நெலும் மல)



தாமரை அலங்காரம்



தாமரை அலங்காரம்



சப்புமலர் (ஸபு மல்)



கத்தரிப்பூ




தியரெல்ல



லியபொத்த






கரும்பு மலர்

மகரம்




மல்லிகை மொட்டு





காதணி
( கர்ணிக்கா )



களஸ்தங்கய




அன்னாசிமலர்



வெல்பொத்த


சீனமலர்



மல்லிகைப்பூ




## சைவக் கோவிலின் அமைப்பு முறை




131553

IX


## தாகபத்தின் அமைப்பு




## தாகபங்களின் அமைப்பு முறைகள் 6

1. மணிவடிவம் 2. நெற்குவியல் வடிவம்
3. குட (பானை) வடிவம் 4, நீர்க்குமிழி வடிவம்
5. நெல்லிக்காய் வடிவம் 6. தாமரை வடிவம்


### இலங்கையில் உள்ள தாகப அமைப்புக்கள்.



நீர்க்குமிழி வடிவம்



மணி வடிவம்



நெற்குவியல் வடிவம்



குட (பானை) வடிவம்

5664



எம்பக்கே தேவாலயத்திலுள்ள கதவின் மரச்சிற்ப
அலங்காரங்களில் ஒன்று

131553